பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

குறமாது.

காட்டாலை ஷெய்கோலியவர்களின் முரீதீனை

புரையாறு

மீருன்கனி யண்ணாவி யவர்களாற்

செய்யப்பட்டது.

ஞானி ஸெய்யிது இப்ராஹீம் ஸாஹிபவர்களின்

ஏட்டுப்பிரதிக்கிணங்க,

Q7:417 N5

தண்ணஹ்மது மகுதா முஹம்மதுப்

புலவரவர்களால் பரிசோதித்ததை,

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1955

REGISTRAR OF BOOKS ... JAN 1955

இதன் விலை] [ரூபா. 1-8-0

111392

Q7:417
N55

குறமாதின் அட்டவணை.

பக்கம்.	அட்டவணை.		பாடற்றொகை.
9	காப்பு விருத்தம்	...	2
,,	ஷை கடவுளர் துதி விருத்தம்	...	14
12	நூலுண்ணாவன்ற வரலாறு கொச்சகம்	...	1
,,	ஷை தருக்கண்ணிகள்	...	7
13	நூன்முகக் கொச்சகம்	...	1
,,	தருக்கண்ணிகள்	...	12
15	குறமாது குறவனோடு மனவெண்ணண் முறைத்தல் விருத்தம்		3
16	குறமாது சிங்காரித்தல் விருத்தம்	...	4
,,	குறமாது மணற்கூட்டிக் காரணம் பார்த்தல் கொச்சகம்	...	3
17	ஷை தருக்கண்ணிகள்	...	9
18	ஷை கொச்சகம்	...	1
,,	குறமாது நபியைத் தேடிப்புறப்பட அலங்கரித்தல் விருத்தம்		1
,,	ஷை தருக்கண்ணிகள்	...	15
19	ஷை கொச்சகம்	...	1
20	குறமாது நபியைத் தேடி வருதல் விருத்தம்	...	1
,,	ஷை தருக்கண்ணிகள்	...	10
21	குறமாதுக்கு ஆண்டவனருளா லொடுக்குவருதல் கொச்சகம்		3
22	ஷை விருத்தம்	...	1
,,	ஷை தருக்கண்ணிகள்	...	13
24	குறமாது நபிநாயகத்தைப் புகழ்ந்துகூறல் அகவற்பா	...	1
25	குறமாதை யார்கள்போய்ப்பார்த்தல் விருத்தம்	...	7
26	குறமாதைப் பிலால்போய்ப்பார்த்தல் தருக்கண்ணிகள்	...	11
27	ஷை விருத்தம்	...	2
,,	ஷை கொச்சகம்	...	3
28	ஷை தருக்கண்ணிகள்	...	10
29	குறமாது நபிநாயகத்தைத் தெரிசித்தல் கொச்சகம்	...	2
30	ஷை தருக்கண்ணிகள்	...	15
32	குறமாது தன்மனம் பொருந்தும் புசிப்பிஃதெனல் கொச்சகம்		1
,,	ஷை தருக்கண்ணிகள்	...	16
34	ஷை விருத்தம்	...	11
35	குறமாது நபிநாயகத்தின் தோற்றமுரைத்தல் தருக்கண்ணிகள்		36

பக்கம்.	அட்டவணை.	பாடற்றொகை.
40	ஷை கொச்சகம் ...	1
,,	ஷை விருத்தம் ...	[illegible]
,,	குறமாது சபையோர் கேட்க வறிவுரைத்தல் வசனம் ...	2
41	தொழுகையில்லாரியல்பு தருக்கண்ணிகள் ...	14
42	ஷை விருத்தம் ...	1
,,	மஹ்ஷறில் வட்டி முதலிய கெட்டசெயலார் படுமியல்பு தருக்கண்ணிகள் ...	10
43	ஷை கொச்சகம் ...	1
,,	முழுக்கு முதலிய கெடுசெயலுள்ளோரியல்பு தருககண்ணிகள்	15
45	ஷை கொச்சகம் ...	1
,,	ஸக்காத்து முதலிய தீயாக்கெடுதலுள்ளோரியல்பு தருக்கண்ணிகள் ...	20
48	நோன்பு நோற்றற்கிடையூறு செய்வாரியல்பு கொச்சகம் ...	1
,,	ஷை தருக்கண்ணிகள் ...	15
50	ஷை கொச்சகம் ...	1
,,	தீவினையோர் நரகிற்றிறங்குலைந்து புலம்பல் தருக்கண்ணிகள்	10
51	ஷை கொச்சகம் ...	1
,,	தந்தஞ் செய்கையாற்றமக்கு மிடிமையுறல் தருக்கண்ணிகள்	29
55	ஷை விருத்தம் ...	2
,,	பலகெடுதலினாலே பாடுபடுதல் கண்ணிகள் ...	83
60	தொழுகையுந் தொழுகைக்கு முன்சொன்ன கலிமாப்பலனு முரைத்தல் தருக்கண்ணிகள் ...	19
62	ஷை கொச்சகம் ...	3
63	கலிமாப்பலிதமானல் காஸியத்திஃதெனல் தருக்கண்ணிகள்	12
65	ஷை தனியன் ...	1
,,	ஷை கொச்சகம் ...	2
,,	ஷை வெண்பா ...	2
,,	தௌஹீ தறிவுகளுரைத்தல் தருக்கண்ணிகள் ...	25
69	ஷை விருத்தம் ...	35
73	குறமாது தன் வரலாறுரைத்தல் கண்ணிகள் ...	107

குறமாதின் அட்டவணை முற்றிற்று.

ஆக பாடற்றொகை 632

விளம்பரம்.

இதனாலே, கனம் பொருந்திய கல்விமான்கள் முதலிய சகலர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில் எம் முன்னோர்களும், யாமும் இராஜ கட்டளைச் சட்டங்களோடு அச்சிட்டு வழங்கிவரும், முஹம்மதிய நூல் புத்தகங்களை மதராஸிலிருக்குஞ் சில அச்சுக்கூடத்தாராகிய இந்து மதஸ்தர்கள் ஒளிப்பு மறைப்புமாக எங்களுக்திரவும், பார்வையுமில்லாமற் பலவாறு பிழைகளாக அச்சிட்டு எங்கள் மார்க்க நூல்களை மிகவுங் கெடுதிகளாக்கி யிருக்கிறார்கள். அதனை சகிக்கக் கூடாதிருக்கின்றனம்.

இப்பொழுது அப்படிக் கெடுதியாய்ப் பிழைகளுற்றிருக்கும் எங்கள் மதநூல் புத்தகங்களைத் திருத்தி யொழுங்குபோல் அச்சிட்டிருக்கின்றமையால் அப்புத்தகங்களைக்கொண்டு திருட்டுத்தனமாக அச்சிடுகின்ற இந்து சமயத்தாராவது மற்றெந்தச் சமயத்தாராவது இதற்கு விரோதமாக நடந்தால் அவர்கள் பேரில் தாவாச் செய்வோம்.

இன்னும் முஹம்மதிய எங்கள் மார்க்க நூல் புத்தகங்களை அம்மார்க்கத்திற்கு விரோதிகளாகிய இந்து அச்சுக் கூடத்தார்கள் விற்பனைக்காகத் தப்புந்தவறுமாக அச்சிடுவது நியாயமல்ல. அஃதேதெனில்; முஹம்மதிய மார்க்க நூல்களெல்லாம் விக்கிரகத் தூஷணையே யல்லாமல் வேறில்லை! அப்பேர்ப்பட்ட நூல்களை விக்கிரக வாராதனையாராகிய சில இந்து அச்சுக்கூடத்தார்கள் எங்கள் பார்வையின்றித் தப்புந் தவறுமாக அச்சிட்டு விற்கிறதைப் பார்த்தால் பணத்திற்காகப் பசுவை யறுத்துப் பங்கு வைத்து விற்கும் பான்மையா யிருக்கிறதே தவிர வேறில்லை

ஆதலா லினிமேலப்படி அத்து மீறி அச்சிடுபவர்கள் பேரில் யாதொரு தடையின்றித் தாவாச் செய்யப்படும், இதை யாவர்களும் அறிவீர்களாக.

இங்ஙனம்,

முஹம்மதிய்யா மத அபிமான தலைவர்கள்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

அச்சிட்ட வரலாறு.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பார்முத லெவையுமாதி படைக்குமுன் றனதுமேன்மைச்
சீர்மிகு மொளியின் முத்தாய்ச் செய்திடு மிறஸூல் பேரிற்
கூர்மையி னுசைகொண்ட குறமகள் சரித்திரத்தை
யேர்பெறத் திருத்தியச்சி விட்டவா றிசைக்குவாமே.

வசனம்.

எல்லா வுலகங்களையு முயிர்களையும் படைத்தரசாட்சி செய்யும் வல்லகாரணனாகிய அல்லாஹு தஆலாவின் திருத்தூதர்களாகிய, இலட்சத்திருபது நான்காயிர நபிமார்களுக்கும், முந்நூற்றுப் பதின் மூன்று முறுஸலீன் கட்கும், நாயகபதியாகிய ஹபீபு றப்பில் ஆலமீன் நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஒருபோது தங்கள் கற்பூரவாடை கமழுந் திரு வாயைத் திறந்து, அருகிலிருக்கும் அஸ்ஹாபிமார்களைப் பார்த்துப் பறுலாகிய தொழுகைக்குப் பின்னர், இல்மென்னும் கல்வியைக் காண வுயர்த்தி யான தொன்றையும் நான் காணவில்லை யென்று சொல்லியிருக்கிறார்கள். ஆதலால், அஷறுபுடைய மக்களே! எனதுடற் பிறவிகளாகிய முஸ் லிம்களே! நீங்கள் பாருங்கள், நம்முடைய றஸூல் நாயகமே கல்வியைக் குறித் திவ்விதம் பிரசங்கித் திருக்கும் போது என்போற் கொத்த கல்வியில்லாத பேதையர்கள், அக்கல்வியின் பெருமையை யென் னென்று சொல்லி முடியும். இஃதுங்கள் யாவருக்கும் நன்றாய்த் தெரிந்திருக்கின்றது தான். அதனாலிவ் விடத்திற் கல்விப் பெரு மையை விரிக்காது சுருக்கமாகக் காட்டின தென்றறிக.

மேலும் நமது முஸ்லிமானவர்களே, தமிழ் பாஷை வழங்கு கின்ற தென்தேச முதலிய விடங்களிலுள்ள மகாத்துமாக்கள் பூர் வீகத்தில் மார்க்க வொழுங்குகள், நபிநாயகத்தின் காரணங்கள் அறபுப்

பாஷையிலிருந்தமையால் அவைகளைத் தாங்களறிந்தும், அது போல் அமல்ச் செய்தும், கதிபெறெய்தும் பொருட்டு, மேற் சொல்லிய தமிழ் பாஷையிற் சேர்ந்த புத்திமான்களைக் கொண்டு, வித்துவான்களைக் கொண்டு புராண காவியங்களாகச் செய்வித்த கல்விகளிலிப்போ தநேகம் நூல்களச்சிட்டு வழங்கி வருகின்றன. அவைகளில் நாம் ஐம்பது வருஷகாலமாக அநேகம் கல்வி நூல்களை அச்சிட்டிருக்கின்றோம். இவைகளும் வழங்கி வருகின்றன. அஃதுங்கள் யாவருக்கும் கையி லிருக்கும் நெல்லிக்கனி நேத்திரத்திற்குத் தோற்றுவது போலத் தோற்றுமல்லவா. ஆனுல், அப்பேர்ப்பட்ட மார்க்க நூல்களைச் சிறந்த கல்விமான்களாற் செய்யப்பட்டவைகள் என்றைக்கும் சரியாகவே யிருக்கின்றன. அவைகள் அச்சிடும் போது உண்மையாக யாம் ஒரெழுத்தைக் கூட்டவுமில்லை, குறைக்கவுமில்லை. இக்தென்றித் தெரியாத சில நாட்டுப் புலவமார்கள் பாடி யிருக்கிற ஏட்டுப் பிரதிகளைப் பழமொழி போலே, பாடினவர் பாட்டைக் கெடுத்தார், எழுதினவ ரேட்டைக் கெடுத்தா ரென்பது போலே, பின்னர் பின்ன ரெழுதினவர் களுடைய தப்பிதமோடு இடையிலே ஒன்று பத்துச் செய்யுட்களையும், கூட வாய்க்கு வந்த மாதிரிகளாகப் பிதற்றி யெழுதி யிருக்கின்றவை களும் அநேகம். அவைகளை யெல்லாம் முன்னர் பார்வையிட்ட புண்யவான்களச்சிட்டதின் பின்னர் கவனித்துப் பார்வை யிட்டால் அதினேர்மையைத் தெரிந்து புகழ்வார்களேயன்றி இகழார்கள். ஆனுல், இகழ்வாருமுளர். அவர்களெத்தன்மையா ரெனில், துலிக்கச்சி யம்மா ளும் புசிக்கென்றுள், நானும் புசிக்கின்றேன், பானையுஞ் சட்டியும் புசிக்கென்று போய் விட்ட தென்னுக் கதைபோலுளரா யிருப்பார். ஆதலால், மேற் சொல்லியபடி, திறக்கேடான ஒரு பிரதியைக் கொண்டு இந்தக் குறமாதென்னும் பாடலைப் பரிசோதிக்கும் போது அநேகமாக மார்க்கப் பிழைகளும், சரித்திர பிழைகளும் கூறியதை கூறியும் இராகக் கெடுதியுமா யிருந்தமையால் முற்படப்பாடிய மகா கனம் பொருந்திய காட்டானை ஷெய்கொலி யவர்களின் முரீதீனுன-புரையாறு-மீறான் கனியண்ணவியவர்கள் பாடலிஃதென்றும் இடையிற் சேர்ந்தவைகளிப் பாடல்களென்றுங் கண்டு பிடித்துத் தள்ள வேண்டியவைத் தள்ளியும் சேர்க்க வேண்டியவைச் சேர்த்தும், பாடவேண்டியவைப் பாடியும், சுத்தப் பிரதியாக்கி, அல்லாஹு தஆலா உதவியினுலும், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கிருபையினுலும், குதுபு

மீரான் முஹியித்தீனாண்டவர்களுடைய கடாட்ச துவா பரக்கத்தினாலும் ஹாஜீ மொ. அ. ஷாஹுல்ஹமீது அண்டு ஸன்ஸ் அவர்களால் பார்வையிட்டு தமது ஷாஹுல் ஹமீதிய்யா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. ஆனதால், இந்தப் புத்தகத்தை நன்குணர்ந்து காணிக்கை வைத்துக் கையாட்சி கொண்டு படிக்கும் புண்யவான்கள் அச்சுமாராட்டமாக வோரெழுத்துக் கூடினும் குறையினும், மேல் விலங்கு கீழாயினும் கீழ் விலங்கு மேலாயினும், நெடியிற்குறிற் பிசகினும் படித்து கையிற் றிருத்திக் கொள்ள அவர்களை யாம் விரும்புகின்றனம். அல்லாஹு தஆலா எல்லாவற்றிற்கும் நன்மை செய்வானாகவும் ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இந்த குறமாது புஸ்தகம் கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,

மதராஸ் 5.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

சோர்க்கக்குறமென்றும், மாதுகுறமென்றும் வழங்கும்

குறமாது.

காப்பு

எழுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

சீறுரு மால முழுமையும் நிறைந்த
தீனபி தமைப்படைத் தவரா
லேருறு சுவன முதலவெத் தலமு
மியம்பிடு மமரர்மா னுடரும்
பேறுரு ஜின்மற் றுள்ளவெப் படைப்பும்
பெட்பொடு மமைத்தவைக் கான
காரண மியற்றும் வலுமையை யுடைய
ஹக்கனே யிதற்கு நீ காப்பு

இதுவுமது.

மறையினின் விளக்காய் வந்து சிர்மக்கம்
வாழ்ந்திடு முஹம்மது நபியைத்
தரையினிற் கண்டே யறிவுக ளிசைத்த
தையலோர் சுவனமங் கையர்போற்
குறமக ளொருத்தி மொழிந்ததைப் பலபல
குறிப்புறு மிசைக்கவி யாக
நிறைதவி ராது பனுவல்செய் திடவே
நித்தனே நீ யருள் காப்பு

கடவுளர் துதி.

எழுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

ஒன்றினி லடங்கான் மகைப்பொரு ளாகி
யுலகெலா மொன்றதாய்ச் சிறந்து
நின்றடி யவர்கள் கருத்தினில் நிறைந்த
நித்தனே வருத்தைந்துந் தொழுதே

கன்றிடாக் கலிமா ரூச்சொடு நினைப்பைக்
கருத்தினிற் பொருத்திடு பவர்கள்
மன்றலார் கமலக் கண்புரு விடையில்
வருமொரு தெளிந்துவானுள்வார் 1

அழிவிலா னிருக்குந் தலமதை யறிந்தே
யந்தியுஞ் சந்தியு மில்லா
வழிவகை தெரிந்தே சரத்தினை யிருத்தி
மவுத்துமுன் மவுத்தாய்ச் சடத்தை
யொழிபடக் காண்போர் வல்லன் சுவன
வெண்பதி புகுதுவர் திடனே
பொழிகதிர்த் தெளிவின் முரீதெனும் வழியைப்
பொருந்தினோ ரிறைபதம் பெறுவார்.

ஐனெனுங் கலிமா வதுதனைத் தெரிந்தே
யாசையை யதனிடை கொளுத்தி
ஐனதி லிருக்கும் மழிவிலாப் பொருளை
யகத்தினிற் றெளிந்திடார் நாளை
வியனுறு மலக்கல் மவுத்திடமாகி
விக்கினப் படுகுவர் திடனே
ஐனெனு மெழுத்தை யருப்படுத் திடுவோ
ரவனது கோலமு மறிவார் 3

ஆண்டு நூறாக வணங்கினு மவனை
யறிந்திடார் கமலக்கண் டிறவார்
கூண்டுதான் திக்கி றொடுதுஆப் பலவுங்
கூறியே ஸுன்னத்து மிகவாய்த்
தேண்டியே வணங்கியே னுலுந்தான் பலனோ
செப்புவார் மெய்ப்பொருள றியார்
மாண்டுடல் புழுத்தே யழியுமு னிறையை
மனத்தினில் வெளிப்படுத் திடுமே 4

சந்த விருத்தம்.

முத்தி லுதித்த முஹம்மதர் பாதம்
நித்தமு மென்னது நெஞ்சி லிருத்தி
யுத்தம மானுகித் தாபுமை யைத்தா
னித்தல பீதி லியம்பிடு வாமே 5

வேறு சந்தம்.

இச்சித் திறையைத் தினமெண்ணிப்புகள்
லட்சத்திருபத்து நாலாயிரர்தாள்
பட்சத் தொடுபற்றி பலபுகழோ
டெட்சித் தத்தி லுவப்புற்றிடுவோம். 6

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மன்னவ சிறஸுல்லா மாமனுரிருவர் தம்மை
மன்னெ றிபலவுணர்ந்த மருமகரிருவர் தம்மை
பொன்னிரு போர்தம்மைப் போரஸ் ஹாபிமாரைச்
சொன்ன இமாம் கடம்பைத் துதித்திசை தொகுக்குவாமே. 7

மாதவ முஹம்மதுல்லா மகள்வழிப் பேரப்துல்
காதிறு முஹியித்தீனின் கமலமெல் லடியை நெஞ்சப்
போதினி விருத்தி நாகூர் புரந்திடும் ஸெய்யிதப்துல்
காதிர் ஷாஹூல் ஹமீது காலடி புகழுவாமே. 8

சொன்னல மறிவு தேர்ச்சி துலங்கிய வேதவாய்மை
பன்னிடுங் கல்விமான்கள் பண்புளோர் தங்கள்பாத
மென்னுளம் புகழ்ந்துகொண்டே யியலுள சொர்க்கமாது
சொன்னநன் னியதியாவுந் துகளறத் தொகுக்குவாமே. 9

வகுதைசூழ் காகிர் வாழ்வோர் மறுவறுங் கல்விதேர்ந்தோர்
மிகுகலை யறிவுகல்வி விலக்கொளி போலத்தோன்று
மகமகிழ் ஸூலைமான் லெப்பை யாலிம்செய் வரத்தால் வந்தோர்
தகுபுகழ் ஸதகத்துல்லா ஸாஹிபிவ் வுரைதந்தாரால். 10

தரைபுகழ் ஸதகத்துல்லா ஸாஹிபிவ் வந்தளித்த
வுரையினைப் போலேயாரு முவந்திடப் புரையாறென்னும்
விரைகமழ் பதியில்வாழ் மீருன்கனி யெனும்பேர்கொண்ட
தரமறியாத னிந்நூற் சாற்றினன் விளங்கமாதே. 11

ஆதிநந் நபிஹிஜூறத் தாயிரத் தொருநூற்றைம்ப
தேதறு வருடம் ஷவ்வா லெனுமதி யேழாந்தெய்தி
யோதிடும் வெள்ளி நாளி லுவப்புநந் நபிமேற்கொண்ட
சாதுறங்குறமான் சொற்ற சரித்திரம் விளம்பலுற்றேன். 12

சங்கையார் புலவோ ரியாருஞ் சாற்றமென் புன்சொற் காண்கிற்
பங்கமாற் பிழைக ளர்த்துப் படித்தினி தாகக் கொண்டாற்
றிங்கள்வான் முதலயாவுஞ் செய்தவனருளும் வேதச்
சிங்கமுஹம்மதின் புஞ் ஜெயமும்பெற்றினி வாழ்வார். 13

கலி விருத்தம்.

நாதனருள் வாழும்நபி நாயகரும் வாழி
வேதநெறி வாழிகவி விள்ளுநரும் வாழி
மாதவர்கள் வாழிகுற மாதுமிக வாழி
மூதறிஞர் வாழிமுஸி லீமெவரும் வாழி. 14

நூலுண் ணுவன்ற வரலாறு.

கொச்சகம்.

பொன்னாட்டு மங்கையரைப் போலிளமை யுற்றநனி
யிந்நாட்டு மங்கையரு மின்பமுறும் பேரழகார்
மன்னாட்டு நற்குறமா மகள் சரித்திரத்துண் ணுவன்ற
வந்நாட்ட மானவரலாற்றை யினிச் சொல்வாமே. 1

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தந்தனனு தனத்தனன தனனு-தன
தனனதந்த தாந்தனன தான.

மின்னெனபே யொருதிமலே தனிலே—அன்பு
மிகவிருந்து வாழ்ந்தவரலாறும்
மன்னர்நபி யிறஸூலைத் தேடி—அவள்
மலேகடந்து போன வரலாறும், 2

ஒண்ணுதலால் தமக்கிறைவன் ஜிபுரீல்—நல்ல
வொடுக்குக்கொண்டு வந்தளித்த வாறும்
பெண்ணரசி யிரந்தது ஆக் கபுலாய்—ஹக்கன்
பெரும்புவியைச் சுருக்கும் வரலாறு. 3

தூதர்நபி சமுகங்கண்ட வாறும்—அவள்
துய்ஸலா மெடுத்துரைத்த வாறும்
வேதநெறி யொழுங்குடைய யார்கள்—மன
மிகமகிழ்ந்து நின்றவரலாறும். 4

மாதவஞ்செய் வாங்குபிலா லப்போ—திவள்
மகளெனவே மனத்திலெண்ணும் வாறும்
நீதமுள வழிவுரைத்த வாறும்— அவள்
நிறைந்ததுயர் பிடித்தவரலாறும். 5

தேறியபின் னவரைக்கண்டவாறும்—அவள்
திருநபியை மாலையிட்டவாறும்
வேறுபல வறிவுரைத்த வாறும்—அவள்
மீண்டுமலை தனிற்போனவாறும். 6

தாறுபுயத் திறஸூலின் பாதம்—பின்னுஞ்
சங்கையொடுந் தரிசித்திடும் வாறும்
நாறுமலக் கருஞ்சுழலாள் தேர்ந்த—பீவி
நாச்சியாரோ டறிவுரைத்த வாறும். 7

தேறுமன மாகமக்கந் தனிலே—அவள்
சிறிது பகலிருந்தவரலாறும்
பேறுமலை தனக்ககன்ற வாறும்—நல்ல
பிரிசமொடுந் தமிழிலுரைப் பேனே. 8

நான்முகம்.

கொச்சகம்.

ஓதரிய நற்குறமாது வந்துமலை மேலிருந்து
வேத ரிறஸூல்நபியை விரும்பியுற்ற தாலடியார்
காதனிறை வேற்றுமொரு ஹக்கனரு ளாலுமவள்
மீதினி னடந்தவுயர்வியப்பையினிச் சொல்வாமே. 1

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தனதாத்த தனதனதாத் தனனா—தத்த
தனதனன தந்ததந்தா தனனா

அறபாத்து மலைதனியாத் தனிலே—மெத்த
அதிகவா முள்ளநன் மாமலையே
குறமாது மதிலொருத்த னுடனே—நித்தங்
கூடியஞ் ஞாருண்டளவும் வாழ்ந்தாள். 2

ஜெயமாகத் தாலிகட்டி யிருந்தாள்—இந்தச்
செகத்திலவள் கற்பழியாதவனும்
நயமாக வொருகாலத்திற் புசிப்பார்—மிக்க
நறைவீச மொருபாயிற் படுப்பார். 3

இறையாதி யவன் வலுப்பத்தாலே—பச்சை
யிலங்குமலை யிவர்க்கிடையில் வளரும்
முறைகள் சொல்வார் பலருமிகத் தானே—ஆதி
முன்னெழுத்தின் விதிமுறையை யறியார். 4

இப்படியஞ் ஞூறுண்டதாக—நல்ல
இயல்மயிலு மிருந்தனளே மலையில்
தப்பகலும் பொற்பினிறஸூலை—அவள்
தானுடி யிருந்தாள் வெகு காலம். 5

சித்தமதில் நினைத்ததெல்லா மறியும்—ஒரு
சிமானைத் தொழுதுநன்று யிருந்தாள்
முத்தொளியா யுதித்திடுநந் நபியை—உன்றன்
மோட்சமுறக் காணவரந் தருவாய். 6

இப்படியே நினைத்தவள் நித்திரையில்—ஆதி
யிறஸூலொளி யாகஜிபு ரீலுந்
தப்பறவே தோற்றவள் கண்டே—ஆசை
ததும்பமனந் தனைமறந்து தவித்தே. 7

திக்கெனவே யெழுந்தவணிற் பார்த்தாள்—அந்தத்
திருவொளியைக் காண்பதாற்றிகைத்தாள்
மைக்கடல் போ லாசைவெள்ளப் பெருகிப்—பெரு
மாரியென இருவிழி நீர்சொரிந்தே. 8

அட்டியதிற் றுயில் புரியுங் குறவன்—றன்னை
யப்பொழுதே யெழுப்பியவனோடும்
துட்டர்களைத் தீனெறியிலாக்கும்—இறை
தூதரினைக் கண்டேனென விண்டாள். 9

வானவர்க்கும் நபிகளுக்கு மரசாய்—வந்த
மக்கமஹ் மூதைக்கண்டே னெனவே
யானவள் செல்லினைக்குறவன் கேட்டே—பொய்யீ
தாரணங்கே யப்படியுமுண்டோ. 10

கல்லது நீ நபியைக் கண்டதுண்டேல்—வானில்
நவில் மழை பெய்திலுண்மையியென் றனனே
சொல்லியவன் வாயடங்கு முன்னே—பூவிற்
சூன்முகிலு மாரிசொரிந் தனவே. 11

முகில்சொரியக் குறவன் கண்டு பயந்தே—அந்த
மெய்குழலாள் முகநோக்கி மொழிவான்
அகிலமெல்லாம் புரக்கும் அல்லா தனக்காய்—நான் சொல்
லரும்பிழை நீ பொறுத்திடென்று னுடனே. 12

பொருத்தனனென்றே மயிலு முறைத்தாள்—அவன்
போற்றி மகிழ்ந்தே புகழ்ந்தா னப்போ
மறுக்காணு நபிபதத்தைக் கண்ட—அவள்
மதிமுகத்தை மறைத்து நின்று புகழ்வாள். 13

குறமாது குறவனோடு மனவெண்ண முரைத்தல்

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

முத்திரை புயத்தி லாரு முஹம்மதை யினிது கண்ட
சித்திர விழியாள் தன்பாற் சேர்ந்திடாக் கணவற் பார்த்தே
பத்தியார் பலன்கள் யாவும் படைத்தனன் பாரி லென்னச்
சித்தியின் கலிமா வோதி தீனெறி யுரைத்துக் காட்டி. 1

இப்படி வரிசை யார்ந்த வெம்பிற ஸலேக்காண
வெப்பறச் செலற்கு நல்ல விடையரு ளென்று ளன்னுள்
செப்பிடு கற்பை நோக்கிச் செல்வழி தூரநீதா
னெப்படித் தனிசெல் கிற்பாயானுமே வாரே னென்றான். 2

எனக்கிறை யொருத்தன் போது மெவர்களுந் துணை வேண்டா நீர்
மனத்தினி லெண்ணம் வேறுவைத்திடா தீரென் றோதி
நினைத்தவர் தமக்கு நன்றாய் நிதமருள் செய்யு மாதி
தனைத்துணை யாக நெஞ்சிற் றரித்தவள் செல்வதற்கே. 3

குறமாது சிங்காரித்தல்.

முப்பது முழமேலான முடித்தலை முழ்கிக் கூந்தற்
கொப்பரும் வாசத்தூப மூட்டிவார்ந் தழகாய்க் கட்டிச்
செப்பரு மலர்கள் சூடித் திருப்பிறை தரித்துக் காதற்
கொப்போடு மணிகள் யாவுங் குறையறச் சூட்டினாளே. 1

பொற்புறு வயிர மாலை புகலருஞ் சினமாலை
விற்பெறு பச்சைமாலை வியன்கொள விளைத்த மற்றுங்
கற்பணி கழுகொவ்வாத கழுத்தினி லணிந்து நல்ல
மற்பெறு கொங்கைமீது வாரிணைப் பூட்டினாளே. 2

காலணி பீலிதண்டை கமர்பந்து கதிர்செய்கின்ற
மேலணி வளையல்வீர கடகமோ டெழில் குலாவு
நீலரத் தினவுட்கட்டு நிரைநிரை யாகப் பூட்டி
வால சூரியனுக் கொப்பாய் மணிவடஞ் சூட்டினாளே. 3

திங்களைப் பழிக்குங் காந்தி திகழும் வில்லூரிப்பட்டு
மிங்கித சுவன ரம்பை யினருடை யான பட்டுங்
கைங்கையில் விளையு முத்தின் கதிரொளி வீசும்பட்டு
மங்கைதான் பூண்டு மண்ணைக் கூடிக்காரணங்கள் பார்ப்பாள். 4

குறமாது மணற்கூட்டிக் காரணம் பார்த்தல்

.கொச்சகம்.

ஆதம் பிறந்தமண லானவொளி வீசுமணல்
வேதம் பொலிந்த மணல் விண்ணவர் கொண்டாடுமணற்
காதங் கமழுநல்ல ஹபீபிறஸூலைக்காண
நீதமுடனே யெனக்கு நிறைந்தமணல் கூடுகவே. 1

கண்டுமனங் குளிர்ந்தோர் ஹக்கன் பொருட்டாலு நல
மண்டு மறிவுரைக்கு மாநபியை மாலையிட்டுக்
கொண்டு மனமகிழ்ந்து கூடிக் குலாவுமனம்
விண்ட மணல்நான்கும் வெளியிலொன்றாய்க் கூடுகவே. 2

ஊனமறு நாயனப்போ தொன்ஜிபுரிலைக்கூவி
யீனமற நீர்புகுந்தவ் வேந்திழைகட்டும் மணலை
மாநிலத்திற் சேர்த்தியொன்றாய் வைத்துறுமென் றானமாரர்
கோனிறங்கி யவ்விதமே கூட்டிவிட்டுப் போயினரே. 3

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தானதனந் தனதனந்த தனதனனா தனத்தான
தந்தன்னா தாந்தானாந் தானதனந் தானா.

ஆதியருள் பெருகுமெங்களஹ்மதனார் திருப்பாத
மன்புடனே காண்பேனேற் கூடுமணல் கூடாய்
சோதியுடல் பாவுமிறை தூதிறஸூல் பாதமதைத்
துதிபெறவே காண்பேனேற் கூடுமணல் கூடாய். 1

சந்திரனை யிருபிளவாய்த் தரணிதனி லழைத்தோர்
சரணமலர் தொழுதிறைஞ்சக் கூடுமணல் கூடாய்
சந்திரனொளி றாலங்கக்கடபு சோடறாஷி லேறிவந்தோர்
சரணமலர் தொழுதிறைஞ்சக் கூடுமணல் கூடாய். 2

அந்தரத்திற் கல்லதனை யன்புரையினால் நிறுத்து
மஹ்மதுதம் பதங்காணக் கூடுமணல் கூடாய்
மந்தரத்தின் குடையில்வரும் வள்ளலிற ஸூலின்
வாகுபதங் காண்பேனேற் கூடுமணல் கூடாய். 3

வானவர்கள் பதந்தாங்க மன்மிஃறாஜேறிவரு
மஹ்மூதர் பதங்காண்கக் கூடுமணல் கூடாய்
நாநிலத்தார் பாவியார்க்கு நாயனிட மன்றாடும்
நபியின்பதங் காண்பேனேற் கூடுமணல் கூடாய். 4

அறக்கிழவி யானவனை யம்புவியி விளமைபெற
வானவரங் கொடுத்தநபி யவர்பாதங் கண்டு
சிறத்துடனே மாலையிட்டுச் செகத்தினில் வாழ்ந்திருக்கச்
செப்புகின்ற மணல்நான்குங் கூடுகவே கூடாய். 5

கருதரிய கிருபையர்மண் காலடிதோ யாதார்
கருணைபெறக் காண்பேனான் கூடுமணல் கூடாய்
மருவுநறை யொருகாக மாநிலத்தில் விசு
மஹ்மூதரின் பதங்காண்பேன் கூடுமணல் கூடாய். 6

திருவுறையு மக்கநகர் சென்றுதொழு திறைஞ்சச்
செப்புகின்ற மணல் நான்குங் கூடுகவே கூடாய்
குருநபியை மடியில் வைத்துக் கொஞ்சிநல பஞ்சணையிற்
கூடிவிளை யாடிநான் கூடுமணல் கூடாய். 7

ஆலமதை யமுதுசெய்தோ ரபுஜஹிலைப் பதறில்
அடர்ந்துவென்றோர் பதங்காண்பேன் கூடுமணல் கூடாய்
நீலவிழியம்மையர் தாலாட்டிடவே துயில் புரிந்த
நிதிநபியைக் காண்பேனுன் கூடுமணல் கூடாய். 8

ஈமானென் றிடுமுறுதி யெவர்களும் பூண்டிடவே
யிறையவனே யுன்னொளியி லிலங்கிட வுண்டான
கோமானு மிறஸூலைக் கூடியணை வேனேல்
குதறத்தில்லென மணல்நான்குங் கூடிடக் கூட்டிடுவாய். 9

கோச்சகம்.

இங்கபடி பற்பலவாயியம் பிக்குற மாமகளு
நங்நபியைக் கூடவெனு நாட்டமெவ்வாறு மெனவே
மன்னுகுறி காண்கமணல் மறைத்துநாற் கூறுசெய்து
முன்னவன்பாற் கேட்டதுஆ முழுதுங்கபூலாயதுவே. 10

குறமாது நபியைத் தேடிப் புறப்பட அலங்கரித்தல்.

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்

மணவினைத் திறந்தாளப்போ வாய்ந்தோன்று யுறுதல்கண்டு
கணினிடை கனவிற் கண்ட காட்சுகை மேலாச் சென்றே
மனமுறு மாசைவெள்ள மதிப்பிடற் கரிதாய்ப் பொங்கி
யிணையிலி நபியைத் தேடியேகிட வலங்கரித்தாள்

தரு-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

தனதனன தனதனன தானதனு தனத்தாங்
தனதனந்த தனந்தாந்தந் தானதந்தாங் தனத்தாம்.

கனகமணி வளையலிருகைகளிலே தரித்தாள்
வனமிகுந்த கருங்கூந்தல் வாரிநன்றாய் முடித்தாள். 1

முன்னவன்ற னருளாலே முடித்திடும் கூந்தலின்மேற்
சொன்னமணி மாலையெல்லாந் தொடுத்துமல ரணிந்தாள். 2

மல்லிகையுஞ் சண்பகமு மகிழ்ச்சிபெற முடித்தாள்
அல்லிநறு மலருடனே யவருபிச்சி முடித்தாள். 3

வில்லியோடு சிறுநாக மிக்கமருக் கொழுந்து
முல்லையொடு பலமலரு மொய்த்திடவே முடித்தாள். 4

நாகமணி நெற்றிப்பட்டம் நவமணியும் பூட்டித்
தேகமெங்குந் துலங்கவொரு திருத்தாலி பூண்டாள். 5

மேகவன கூந்தலிற்கோ மேதகமு மணிந்தாள்
வாகுசெறி மணிபலவும் வகை வகையாய்ப் பூண்டாள். 6

பின்கொக்கியுஞ் சரப்பளியும் பிறைவடமும் பூண்டாள்
மின்னுமணி மோதிரங்கள் விதவிதமாயணிந்தாள். 7

பொன்னதனில் மணியழுத்தும் பூம்பதக்க மணிந்தாள்
இன்னதெனத் தெரியவொண்ணா ரத்னமணி யணிந்தாள். 8

மணிச்சிலம்பும் பாடகமும் பாதமதிற் பூண்டாள்
தணிவறுகா லாளிதண்டை சங்கிலியு மணிந்தாள். 9

புனைந்தமலர் மணியோசை புயலெனவே யதிரக்
கனதனத்தி லிணங்குமொளிர் கச்சதனை யணிந்தாள். 10

சந்திரனுஞ் சூரியனுந் தான்மறையுங் காந்தி
மிந்த்ரஜால பட்டதனையிடையிற் கொய்தே யுடுத்தாள். 11

இந்த்ரகொடுப் பட்டதனை யிடையிற்கொய்தே யுடுத்தாள்
கந்தநறு மணங்களெல்லாங் கனதனத்தி லணிந்தாள். 12

சாந்துகள் பம்பனிநீர் சந்தனங் குங்குமமும்
வால்ந்தநறுங் கஸ்தூரி மணம்பலவு மணிந்தாள். 13

கொந்துகமழ் காதிற்கொப்புங் கூர்விழிக்கு மையும்
அந்தரங்க மாகவெடுத் தணிந்தாளே மாதும். 14

சிந்தைதனி லிறையவனைத் திடமாக நினைந்தே
வந்தபுகழ் திரு நபி முன் வருகவெழுந்தாளே. 15

கோச்சகம்.

எழுந்தாள் பதினாலா மெல்லிரவின் சந்திரன்போற்
செழுஞ்சீர் முஹம்மதனார் சீர்பாதங் கண்டதனில்
விழுந்தே மனமகிழ்ந்து வேண்டுமறி வைத்தெளிந்து
கொழுந்தார்ப் புயமணிந்து கூடக்குறமாமகளே.

குறமாது நபியைத் தேடி வருதல்.

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

பிறையென வொளிவு வீசும் பெரும்புக ழிறஸூல் பாதம்
அறிவொடு கண்டு போற்றி யரியகல் விகளைப்பேசக்
குறிபலத் தேர்ந்து மாது கூடையொன் றிடுப்பி லேந்தித்
தரையினில் மயிலைப் போலே தானடை புரிய லுற்றாள்.

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தானதன தனத்ததனந் தனத்தாந்—தனந்
தனந்தன தனதனன தனத்த.

ஆடவரை மயக்கமருந்தெடுத்தாள்—அவள்
அணங்குநிகா முகுமிக வெறிக்க
வாடைபல விடங்களுமே மணக்க—இட்ட
மணிகளெல்லா மொளிவெயில் போலெறிக்க 1

நீடியவள் மலைமீதில் நடக்க—அங்கே
நீண்டமரத் துறுபுறவு கூவத்
தேடிய நல்லாசைவெள்ளம் பெருகக்—கானிற்
செறிந்தகடு வாயினங்கள் சூழ. 2

மான்மறைகள் முயலுடும்பு நாவி—சேர
வந்துபணிந் தேத்திச்சலா முரைக்க
கானகங்கள் முழுதுமஞ்ஞை கூவக்—காடை
கவுதாரி போர் கொர்ச்சிப்பு மேவ. 3

சனமிலாக் குருகினங்கள் பாட—அந்த
இசையிற்பாடம் விரித்துநாக மாட
வானவர் வந்திறங்கி யெந்த விடமும்—நல்ல
வாஞ்சையோடு பந்தடிக்கு மலையே. 4

சிர்பாவு மக்கநகர் போக—எட்டுத்
திசையும்வழி காட்டுமந்த மலையே
கார்கவிந்து குளிர்ச்சை மிகப் பொருந்து—நல்ல
கலீபத்துல்லா இருக்கு நகர் போக. 5

நீர்மலையும் கார்கவிந்த மலையும்—மற்றும்
நீணமரங்க ளார்மலையுங் கடந்தாள்
பார்புகழும் பெருமலைகள் பலவும்—நல்ல
பச்சமலை பவளமலை கடந்தாள். 6

ஆலமதிற் கதிரினொளி மறைய—இரு
ளார்ந்ததப்போ தொருமலையிற் றறித்தாள்
ஏலுமிறை வனைத்தொழுது போற்றி—யவ
ளிருப்பதனா லவனுடைய பரிமான். 7

சிலமுள்ள ஜிபுரீலுக்குண்டான—தென்றன்
றிருநபியைத் தேடியந்தக் குறமான்
சாலமிகு மலைகடந்தோர் மலையில்—வந்து
தரித்துத்தொழு திருக்கிறாளிப் போது. 8

காலுமொளி சொர்க்கநகர் தனிலே—யுள்ள
கனதிபெறு மொடுக்கினிலொன் றெடுத்து
நீலவிழி யாளுணவே கொடுத்து—நீர்நன்
னேத்திசெய்து வாருமென்றா னிறையே. 9

அப்படியே ஜிபுரீலும் வயது—மெத்த
வானநரைக் கிழவிபோற் கூனி
மெய்ப்படியுங் கந்தையொடு நடுங்கி—மேனி
விடுவிடென்றே யொடுக்கினொடும் வந்தார். 10

குறமாதுக்கு ஆண்டவனருளா லொடுக்கு வருதல்.

கோச்சகம்.

வந்தவரைக் கண்டுகுற மானா ளெழுந்து நின்று
சிந்தை மகிழ்ந்துசலாஞ் செப்பியவர் கையிலுற்ற
வந்தவொடுக் கைவாங்கி யமரரிவ ரென்றறியா
தெந்தவூ ரெவ்விடநீர் சாரெனவே கேட்டனளே. 1

அப்போது வானரந்த வாயிழையை நோக்குபுநீ
யிப்பாரி லேபசியா யிருப்பதறிந் தாதிவல்லோன்
தப்பா துணவுக்குத் தாவறிவித் தானெக்கென்
றெப்போ டுரைக்கவவ ளுற்றுணர்ந்து பார்த்துரைப்பாள். 2

இந்த வொடுக்கினைப்போ லிவ்வுலகி லார்மடவார்
விந்தையுடனேயாக்க மிருவரம் பெற்றோர்களுண்டே
கந்தமணமு முண்டோ கழறிடில்நீர் தேவரென்றாள்
சிந்தை மகிழ்ந்து ஜிபுரீல் மறைந்து சென்றனரே. 3

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

ஜிபுரியீல் மறைந்து செல்லத் தெரிவைநெஞ் சயர்ந்துதேறி
நபிபொருட் டாலனுதி நமக்கனுப் பின்னென் றெண்ணிப்
புவியினிற் கிடையா சொர்க்கப் புசிப்பினைப் புசித்து நன்றாய்க்
கவினுறும் விழிமூடாமல் ஹக்கனைத் தொழுதுற்றாளே.

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தனன தந்தாந் தனன தந் தானை தாத் தனன
தானை தந் தாத்தானத் தந்ததத்த தனந்தாம்

கதிரவன்றான் வருமளவும் காவலனைத் தொழுது
காவலவன் பாற்றேடிக் கந்தரத்தி லிருந்தாள்
மதியெனவே குறமகளும் வான்கதிர் தோன்றியபின்
வழிநடந்து மனிதர்பவ வம்பையெல்லாந் தொலைக்கும் 1

பதிவளஞ்சேர் மக்கநகர்ப் பாதையினிற் பொம்பொழுதிப்
பாதைதனைச் சுருக்கிவைப்பாய் பரனேயெனக் கேட்டாள்
விதியினெடு மதியுமொத்து வினையகல விருக்கும்
வேளையாத லிவள்கேள்வி வேதன்கபூல்ச் செய்தே. 2

அப்பொழுதி லவனுமொரு வமரர்தனைக்கூவி
அம்புவியைச் சுருக்கிடச்சொன் ஞனது போலவரும்
தப்பாம லொருநொடிக்குட் டரைதனையே சுருக்கத்
தையல்மக்கத் தெல்லையதின் சமுகத்திலே யானாள். 3

மக்கநக ரெல்லையிற்போ மாதவனின் மூக்கில்
முஹம்மதனுர் மேனிமண வாடைவர மகிழ்ந்தே
திக்கெனவே தெருக்களிலே சிலம்பொலிகள் புலம்பத்
திகுதிகென நடைபுரிந்தாள் சேயிழையப் போது. 4

தெருக்களிலே யுள்ளவர்கள் பார்த்திவள்தன் சொர்க்கத்
தெரிவையரி லுள்ளமின்னே தெரிகிலமே யென்பார்
இருக்குமனை தோறுமுள்ள இளங்கொடிமார் வெளியி
லெட்டியெட்டிப் பார்த்திவள்தா னிலக்குமியோ வென்பார். 5

இப்புவியி லிவள்போலொரு வேந்திழையி னுளே
        யிதுமட்டுநாம் கண்டதில்லை யென்றுமொழி வார்கள்
தப்பகலும் சொர்க்கம் விட்டுத் தரையினைபார்த் தகலத்
        தனித்துவரு மரம்பையரோ தான்றெரியோ மென்பார். 6

கவனமொடுங் கண்டவர்கள் கனிந்துமன மகிழ்வாய்க்
        காவிலுருங் களிமயிலோ கவலவரி தென்பார்
சுவனபதி தனக்கிணையாச் சொல்லுமிந்த மக்கத்
        தூய்நகரத் திவள்போலொரு தோகையுமில் லென்பார். 7

பூமியிலே யிவளையொரு புதுமையொடு மாதி
        புதிதாகப் படைத்தனுப்பும் பூவையென வுரைப்பார்
தோமகலு மாமினுரின் றெல்கிளையிலுள்ள
        தோகையிவ ளாமெனவே சொல்லத்தகு மென்பார். 8

மூமினவ ருடையதவ முற்றிவரு பேறு
        மும்மறையு நம்மறையு மொழிகிளியோ வென்பார்
நேமிதனி லிவளுடைய நீள்வரலாறெல்லாம்
        நீதிறவு் மானறிவா னிகழ்த்தவொண்ணு தென்பார். 9

தெரிவையரி லொருத்தியைத் திருமயிலைப் போலே
        தேசமெல்லாந் தேடிடினுஞ் சிக்கிடாதென் றுரைப்பார்
கருவமைந்த ஆதநபி காண்முளைகள் தனிலே
        கண்டவருண் டோவிவள் போற் காசினியி லென்பார். 10

அருமையொடு மமரவரிவ் வாறுசொல் நடந்தே
        யழகுதரும் கஃபத்துல்லா வருகினிலுற் றுளே
குருநபியப் போதுறத் துள்ளோ பல ரோடுங்
        கூடியிருந் தார்களவதைக் குறமகளுங் கேட்டாள். 11

வள்ளலிற ஸூலுமொரு மதியெனவே யார்கள்
        மற்றவரும் நட்சத்திரம் போலுற்றிடு மிடத்தில்
விள்ளு குறமாதுமொரு மின்னினிணை தோற்றி
        வெளியில் மறை வாக நின்று விரைந்துஸலாஞ் சொன்னுள். 12

துடியிடையாள் மறைவில் நின்று சொல்லும் ஸலாங் கேட்டுத்
        தோகையிவ ளாரெனவே யார்கள்முதலெவரும்
நெடிதுளத்தில் யோசித்திடு நோங்குறமாது
        நெயினுர் முஹம்மதரைத்துதித்து நிகழ்த்திடுவாள். 13

குறமாது நபி நாயகத்தைப் புகழ்ந்து கூறல்.

அகவற்பா.

ஆதிதன் னபியே அஹ்மது நபியே
சோதிமெய் நபியே துறவளர் நபியே
நீதிசேர் நபியே நேசமார் நபியே
பாதியாய் மதியைப் பகிர்ந்தநந் நபியே

கோதிலாவறிவு கூறிடு நபியே
காதமெய் மணந்தான் கமழ்ந்திடு நபியே
எத்திம்கள் நபியே யாறஸூல் நபியே
முஸ்தபா நபியே முஹம்மது நபியே

சித்தர்கள் நபியே ஜெயம்வளர் நபியே
கத்தீபு நபியே காஸீம்நந் நபியே
எத்திசை யோர்களு மேத்துநந் நபியே
புத்தியில் மிகுந்த புண்ணிய நபியே

அறபிகட் கரசென வந்தமா நபியே
குறைஷிகள் நபியே குருநெறி நபியே
ஷறகியல் நபியே தருமநந் நபியே
அறிவதற் கரிய விலாஞ்சனை நபியே

அன்பியா மர்ர்க்கு மவுலியா மார்க்குந்
தன்பமா யுதித்த தாஹாநந் நபியே
எம்பிரா நபியே யேழையர் நபியே
சிம்பிடா மலையெடுஞ் செப்பிடு நபியே

அறுஷினி லேறிய வழகிய நபியே
இறையுடன் பேசிய இகபர நபியே
மறைபயில் நபியே மான்மொழி நபியே
முறையுறு மலிமா முலையுனு நபியே

தரையினிற் பாதந் தான்படா நபியே
இறைஸலா முமக்கிங் கெடுத்தியான் சொல்கிறேன்
அஸ்ஸலாமு அலைக்கும் அஹ்மதே யென்று
முஸ்தபா நபிக்கு மொழிந்தனள் ஸலாமே.

குறமாதை யார்கள் போய்ப் பார்த்தல்.

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

ஸலாமது மறைவில் நின்று சாற்றுதல் கேட்டு மேன்மைப்
பலாபல னிறைபாற் பெற்ற பயஹுாம்ப ரிறஸூ லுல்லா
நிலாமணிச் சித்தீக் கென்போர் நிதிமுக நோக்கி யென்பேர்
சொலாவுறு பவள்யா ரென்னச் சுருக்கிற்பார்த் துரமென்றாரே. 1

கொண்டலி னிழலி லாருங் கோவி றஸூல்சொற் கேட்டுத்
திண்டிற லபூபக்கர் சென்று போய்ப் பார்த்தாரன்னாள்
கண்டுடன் ஸலா முரைத்தாள் கழறவர் புதுமை யாகி
மண்டலத் திவள்யா ரென்ன மனதில் யோசித்து நின்றார். 2

அப்பொழு திறஸூ லுல்லா வபூபக்கர் வாரா தாலே
செப்புமர் தம்மை நோக்கிச் சென்று நீ ரென்பேர் தன்னைத்
தப்பற வுரைத்தாட் பார்த்துச் சார்ந்திடும் புகழீ ரென்று
ரப்படி யவரும் போந்தே யரிவையைப் பார்த்திட்டாரே. 3

பார்த்திடு முமறை யன்னாள் பரிவொடு நோக்கி நல்ல
சீர்த்தியீர் ஸலாமென் றோதத் தேன்மொழி யொழுங்கைக் கண்டு
கீர்த்தியி னிவள்தான் சொர்க்கக் கேகய மோவென் றுள்ளம்
வேர்த்திட யோசித் தங்ஙன் வியப்பொடு நின்றா ரப்போ 4

உத்தம றிறஸூ லுல்லா வுமறுமே வாரா தாலே
பத்தியின் லௌகி லுள்ள படிகுறான் கோவை செய்த
புத்தியி னுதுமான் றம்மைப் புக்குநீ ரென்பேர் சொன்ன
வத்திரு மின்னாள் யாரென் றறிந்து பார்த்துறு மென்றாரே. 5

தானவ னிறஸூ லுல்லா சாற்றல்கேட் டுதுமான் போந்தம்
மானினைக் கண்டா ரன்னாள் வரிசையின் ஸலா முரைத்தாள்
மேனெறி யுதுமா னந்த மெல்லிசொற் கேட்டுங்கின்னாள்
வானமின்றானோ வென்ன மனதில் யோசித்து நின்றார். 6

பேணிய சிந்தை மூன்று பேருமே வாரா தாலே
யாணினி லழக ராலி யவணிலா தறிந்து மேன்மை
பூணிய விறசூ லுல்லா புகழ்பிலால் தம்மைக் கூவி
மாணிளை யாரென் றோர்ந்து வாருநீ ரென்று சொன்னார். 7

குறமாதை பிலால் போய்ப் பார்த்தல்.

தரு-இராகம்- சங்கராபரணம்-ஆதிதாளம்.

தனதனன தானதனதனத்தா தனந்தனத்தாத் தனனந்
தனதனனாத் தந்ததன தனதனனத் தாந்தா.

அறிவளபி லாவினைப்போ யணங்கினைப்பார்த் துறுமென்
றஹ்மதனார் சொன்னவுடனவர் விரைவிற் போந்தே
பொறுமையுள மாதைக்கண்ட போதவளு மிவர்க்குப்
புகலுஞ்ஸலா முரைத்தனளப் புதுமையிலா லோர்ந்தே. 1

நெறியினொடு நிற்கையிலே நீண்டகுழன்மாது
நீரெவர் சொல் விடுமெனவே நிகழ்த்தின ளப்போது
தறைபுகழ் பிலாலுமவள் தனைநோக்கி யானே
சமதிறைபள்ளி யில்வாங்கு சாற்றும் பிலா லென்றார். 2

வாங்கு பிலால் நானெனவே வகுத்தவுட னவரை
மாதுகுற நோக்கி யொரு மாமஸலாக் கேட்பாள்
வாங்குடன் சொல் வாங்கில் பறு லாறும் சுன்னத் தீராற்
பதினெட்டுகற் ஷறுத்து முண்டு பகர்ந்திடும் நீ ரென்றாள். 3

திரைக்கடல்நேர் கல்வியுள்ள தெரிவை நல்லாள் கேட்ட
திருமஸலா வினுக்கு பதில் செப்பத் தெறியாமற்
றரைத்தலத்தோர் புகழும் பிலால் சங்கை நபி பாலிற்
சார்ந்து நின்றே யதபினொடு சாற்றிடுவ தானார். 4

நரைத்த மூப்பி யாரைநல்ல வாலிபபெண்ணுக்கு
நாயகமே யுலகிலெந்த நானிலுநான் கேட்காப்
பெருத்திடுங்கா ரணத்தொடுமப் பெண்ணுமெனைப் பார்த்துப்
பேசுஞ் சில மஸலாக்கள் பெட்பொடு கேட்கின்றாள். 5

அவளொரு பெண்ணாக விருந் தாலுமிந்த வுலகி
லழகான கல்விக்கட லாவிருக்கின்றாள்
துவளுமிடை யாளுலகின் றேகையர் போ லில்லைச்
சொர்க்கநகர் மங்கையற்போற் றோற்றுகிறா ளென்றார். 6

இப்படி பிலா லவர்தா னிசைக்கு மொழி யாவு
மெழிலிற ஸூல் கேட்டவணி லிருப்பவர்க ளறிய
வெப்பறுகற் பூரமணம் வீசு திரு வாயை
விகசிதமாய்த் திறந்து மெள்ள விண்டிடுவ தானார். 7

ஒப்புவமைக் கடங்காத வுடை யவனின் செயலை
யுலகிலெவர் கண்டு சொல வுண்டும் பிலா லேநீர்
தப்பறவே யின்னுமிகு தாட்டியிற் போ யந்தத்
தையலினார் பேரிவணிற் சார்ந்திடுங் காரியமும். 8

வினவிவரு வீரெனவே விள்ளபிலா லுள்ளம்
விருப்பமுற்றுச் சென்றுகுற மெல்லியரைப் பார்த்தே
வனமயிலே யுண்பதியும் வண்பெயரு மிவணில்
வந்திடு காரியத்தையுமே வழுத்திடென வுரைத்தார். 9

ஈனமறு மயிலும் பிலா விசைத்தது கேட்டவரோ
டென்னுடைய வூர்பேரு மிருக்கட்டு நானிங்கே
யானகரு வஞ்சொலினு லதை நிறைவேற்றுதற்கே
யாகிடுமோ வும்மாலே யறைந்திடு மென்றனளே. 10

மாதுமொழி கேட்டுபிலால் பதிற்சொல்லக் கூடாமல்
மனது மிகத் தயங்கமதி மயங்கிநபி யிடம்வந்
தோதுகுற மாதினுரை யொன்றையும் விடாம
லொதுங்கி நின்று விளங்கநன்று யுரைத்திடுவ தானார் 11

அறுசீர்க் கழிலடி யாசிய விருத்தம்

அந்தமா னூரும்பேரு மன்புடன் கேட்டதற்குச்
சிந்தை நானுற்றே வல்லாற் செப்பிடப் போகா தென்று
வெந்தவா றுகளோ சொல்லா திவனுறுங் கருமமோதி
லுந்தாமல் நிறைவேற் றற்கே யுறுங்கொலென் றியம்பினளே. 1

இப்படி யவள்கூட் சத்தி னியம்பலால் வந்து விட்டேன்
மைப்படி குடையீர்வேறு மனிதரை யனுப்பியன்னுள்
தப்பறு சொல்லினுவிச் தான்வரச் செய்யுமென்னச்
செப்பின ருணர்ந்து வேதத்திருநபி யுரைப்பதானார். 2

கோச்சகம்.

இன்னுமொரு தோம்பிலா லேநீர்தாம் போந்தவளு
மென்ன கரு மத்திற் கிவணடைந்தா ளென்றறிந்தே
சொன்னயத்தி னோடுஞ் சுறுக்காக வாருமென்றார்
நந்நபிசொற் போலவரு நங்கையின் பால் சென்றனரே. 1

வெற்றிகொள் பிலாலுமந்த மெல்லியைப் பார்த்திவ்விடம்
யுற்றகரு மங்களென்ன வோதுகவென் றூரதற்குச்
சிற்றிடையும் நந்நபிபோற் செப்பிடுவ தல்லாமல்
மற்றொருவர்க் கென்கருமம் வழுத்திடே னென்றனளே. 2

நங்கையுரை கேட்டுபிலா நபியிடத்தில் வந்தரிய
சங்கையொடுஞ் சொல்ல நபி சந்தோஷ மாகியந்த
மங்கையரை யிங்கழைத்து வாருமெனவே சிறந்த
தங்கநிக ராணபிலால் தம்பா லிசைத்தனரே. 3

தரு-இராகம்-கல்யாணி-ஆதி-தாளம்.

தனதன தாங் தனந்தன தாங் தனந்தா தந்த
தந்ததனங் தாந்தனன தனந்தாம்.

நபியுரைப்போல் விரைந்து பிலால் நடந்தே—அந்த
நங்கையிடம் போந்துமிகு மகிழ்வாய்
குவியுநல வசனம்பலபேசி—யுன்னைக்
கூட்டிவர நபியுரைத்தா ரென்றார். 1

நபியழைத்தா ரென்றமொழி தானே—யந்த
நாரியுங்கேட் டகமிகவு மகிழ்ந்தே
புவியெவையும் படைத்தரசு செய்யும்—ஒரு
புன்னியனை மனதில் மிக நினைத்தே. 2

ஆதிறஹ் மானேயடங்கானே—சொல்லற்
கரிதான வல்ல பெரியோனே
யோதுமஞ்ஞு றண்டளவும் யானே—கன்னி
யுற்றகும ராகவிருந் தேனே. 3

கற்பழியா தஞ்ஞுறு வருடம்—ஒரு
கணவனொடு மலையினில்லா தெனது
பொற்புமன நினைத்தபடி நபியை—மணம்
பூண்டிருந்து வாழவருள் புரிவாய். 4

கிருபையுள்ள நாயகனீ யதனால்—மாக்கள்
கேட்டபடி யருள் மிகவுங் கொடுப்பாய்
பொருண்மையுட யோனேயெனப் போற்றி—மானாள்
பூங்கரத்திற் குறக்கூடை யெடுத்தே. 5

காற்சிலம்பு கலகலென வொலிக்க—இரு
கைவளைகள் பளபளென வெறிக்கத்
தேற்சியுள்ள மார்மதினமே லணிந்த—ரத்னத்
திருவடத்தி லொளிமிகப் பிறக்க. 6

மேற்சிறந்த பட்டுடையின் பிரபை—பகல்
வெயிலெனவே சுடர்திசைகளெறிக்க
ஊற்சிதமாய் மற்றுமுள்ள பணிகள்—யாரு
முவமைசொலற் கரிதாக விளங்க. 7

ஏர்கொள் திரு மேனியிலே யணிந்த—வாச
மெட்டிசையு முட்டினி வீசப்
பேர்கொள்வன மயிலினைப்போ லெழுந்து-பிலால்
பெறுமகள் போற் பின்னுமுன்னு நடந்தார். 8

தோழரெனு முடுநடுவி லிறஸூல்—வானிற்
ரோன்றுமதி போலிருக்கும் சபைமுன்
வாழும் சொர்க்க வரம்பையர் போற்றானே—குற
மாதெவரும் புதுமையுற வந்தாள். 9

புதுமை நபி சபையிலுள்ளோர் காண்கக்—கையிற்
பூண்டகுறக் கூடையது தானே
அதிகவொளி யெறித்திடவே வானில்—ஒளி
யார்ந்தெறிக்கு மின்னலைப்போல் வந்தாள். 10

குறமாது நபிநாயகத்தைத் தெரிசித்தல்

கோச்சகம்.

வந்தகுற மின்னாள் முஹம்மதுற ஸூலொளியை
யந்தமுறமை யணிந்த வழகுகண்க ளானோக்கிப்
புந்திமகிழ் கூர்ந்துநற் பொறுமையத பாகவமே
சந்திரனை நேர்பார்க்குஞ் சாதகப்புட் போலுநின்றாள். 1

நின்ற மடமயிலை நெயினார் முஹம்மதந
மன்றல்கமழ் வாய்திறந்து மாசகல வந்தமின்னே
யுன்றன்பதி யும்பெயரு மோதுகவென்றே யினிதாய்
நன்றியுடன் கேட்கவந்த நங்கைநய மாயுரைப்பாள். 2

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தானதன தானதந்தாத் தனத்தா—தந்த
தானதனு தானதத்த தானு.

நீதிநபி நாயகங் கேட்ட தற்கே—யந்த
நேரிழையா ளீதுரைப்ப தானுள்
ஆதியமைத் துளபதிரண்டுண்டும்—அதி
லாம்பதியெப் பதியைத்தருவானே. 1

ஓதுமலை யோடுரைத்த நபியே—யஃ
துங்களுக்குத் தெரிந்திருக்கலாமே
பேதமையை யுடையபெண்ணுப் பிறந்த—யானும்
பேரறியே னூரறியே னபியே. 2

இந்தவித மந்தமின்னு னுரைக்கச்—சொர்க்கத்
தேந்தலிறஸூல்நபியு மகிழ்ந்தே
சந்தநறைக் குழலியான யின்னு—முன்றன்
ஜாதிகுலஞ் சொல்லுகெனக் கேட்டார். 3

ஜாதிகுலங் கேட்டநபி தமையே—யந்தத்
தையல்நன்ருய்ப் புகந்திதனைச் சொல்வாள்
கோதறுந்த குறைஷிவழி தனிலே—வந்த
குருநபியே ஜாதிகுல முங்கள். 4

வேதவிசு வதிப்புடைய பேரை—ஜாதி
வேருகப் பிரித்துச்சொல்ல லாமோ
பாதகர்கள் செயலொழிய இஸ்லாம்—பூவிற்
படரவெங்கு மரசுபுரி நபியே. 5

என்னுடைய ஜாதிகுலந் தங்கள்—அன்பா
ரிருதயத்திற் கறிந்திருக்கச் சபையிற்
சொன்னதினு லென்ன பயனென்றே—யந்தத்
தோகையுரைத் திடநபியுமகிழ்ந்தே. 6

இங்குவந்த கருமமென்ன மயிலே—யஃ
தெடுத்துறையென் றூரதற் கம்மாது
சங்கையிற விதியுளதால் யானு—முங்கள்
தமைக்கண்டருள் பெறவந்தன னென்றுள். 7

துங்கநபி கேள்விக்கிந்த விதமாய்—அந்த
தோகைசொல்லச் சபையிலுள்ளோர் யாரும்
அங்கமகிழ் கொண்டெவையு மமைத்த—ஆதி
யருளுடைய ளிவளெனவே மதித்தே. 8

தீனிலையி லுறுதிமிக வுள்ள—இந்தத்
தெளிவையைப்போற் கண்டதில்லை யென்றே
தேனினுரை யாமொருத்தர் கொருத்தர்—மிகச்
செப்பினரப் போதில் நபி நாதர். 9

எழிலுடைய குறமகளைப் பார்த்தே—நீயு
மிருமெனவே யுரைக்கவதற் கவளும்
பழுதகலு நபியேயுங்கள் சமூகந்—தன்னிற்
பகரும்பெண்ணைப் பிறந்தவளா தலினல். 10

இருக்கமனப் பயப்படுவ துடனே—யுட
லினுலும் வெட்க முற்றனணு னென்றுள்
பெருக்குமிந்த வுரையினைகேட் டிறஸூல்—மெத்தப்
பிரிசமுற்றே யொருவரையங் கழைத்தார். 11

வந்தவரை நோக்கிநபி யிவட்கே—யன்னம்
வழங்குமனை தனிற்கொடுபோமென்றூர்
அந்தமொழி கேட்டு குறமாது—நபி
யஹ்மதரைப் புகழ்ந்துரைப்ப தானுள். 12

அடியள்மனப் பொருத்தமுள்ள புசிப்புக்—கிட்டி
னுற்புசிப்ப தன்றியல்லாற் புசியேன்
வடிவுடைய வானவர்ஜின் னரும்—பதம்
வந்துபணிக் திடுநபியே யென்றுள் 13

இந்தவித மாதுசென்ன சொல்லைக்—கேட்டே
யேகனிற ஸூலவனை நோக்கி
யுந்தன்மனப் பொருத்தமுள்ள புசிப்பு—மின்ன
வொழுங்கெனவே யுரைத்திடுக வென்றூர். 14

சந்தனகுங் குமமனியும் புயத்தார்—அருள்
தழைக்குமஹ்மூதருரை கேட்டுப்
புந்திமகிழ்ந்தே குனப்பெண் டனக்கு—மனப்
பொருத்தமுள்ள புசிப்பிஃதென்றுரைப்பாள். 15

குறமாது தன் மனம்பொருந்தும் புசிப்பிஃதெனல்

கோச்சகம்.

மாதுகுறம் வள்ளல் முஹம்மதனு ரைப்புகழ்ந்து
நீதியொடு தன்மனது நித்தம் பொருந்தலாய்ப்
பூதலத்தி லுண்ணும் புசிப்பது தானின்னதென
மூதறிவி னேடவரையில் மொழியத் தொடங்கினளே.

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தனத்தான தனதனந்த தனதந்—தந்தாந்
தனதந்தந்தா தனதனதந் தனதா.

மிஸ்கின லுலகிலுள்ள வயலில்—நன்றாய்
விளையும் சம்பா வரிசியையும் புசியேன்
பசிக்கான கோதும்பை கேள் வரகு—சாமை
பாற்சோளம் தினையிறுங்கும் புசியேன். 1

குருகினங்கள் பொரித்த குஞ்சு கோழி—வெள்ளைக்
கொக்குமுத லுலகிலுள பறவையெவையும்
பெருமொட்டகை மாடாடு மரையும்—மானும்
பெட்புடும்பு முசல் முதலாய்ப் புசியேன். 2

காராவின் பாலுமதிற் கடைந்த—தயிர்
கமழுநறு நெய்வாக்கால் குளநீர்
சீரான ஆற்றிலுள நீர்கிணற்றி னீரும்—எந்தத்
தினங்களிலும் நான்புசிக்க மாட்டேன். 3

கறக்கும்பசும் பாலெருமைப் பாலும்—ஒருக்
காலுங்குடி யேன்பனையின் சாறும்
நிறகனிகள் வாழைபலாப் பழமும்—கானில்
நிற்குமாக் கனியீந்தும் புசியேன். 4

சீராக வடுப்பதனி லேற்றி—நல்ல
செப்பமுடனாக்கினதும் புசியேன்
நேரா ஆக்குமவர் குணமும்—செய்யு
நெறியுமிந்த விதமிருக்க வேண்டும். 5

ஆணெனினும் பெண்ணெனினு மார்க்கத்—துள்ள
அதபுநெறி யொழுங்கறிந்தோர் வேண்டும்
சோணிடுபொய் புரணிவம்பு களவு—கெட்ட
கோட்களு மில்லாதவர்கள் வேண்டும். 6

வேதவிலக் கானஸனுக் கள்ளுக்—கஞ்சா
வெறியர்க்குச் சாராயம் அபினி
சூதுபிறர் குடிகெடுத்தல் முதலாய்க்—கெட்ட
துற்குண மில்லாதவர்கள் வேண்டும். 7

நாயனுக்கே பயந்தைந்து பறுலும்—நித்தம்
நாடிஸக்காத் ததனினோடு நோன்பும்
ஆயுள் ஹஜ்ஜும் செய்துஸதக் காவும்—நல்ல
வன்புடனே செய்பவர்கள் வேண்டும். 8

கூடியணை குஸூல் முழுக்குத் தனையே—பஜிர்
குணக்கு வெளுத்திடமுன் குளிப் பவராய்த்
தேடியிடுங் கணவரையா தரிக்கும்—நல்ல
தெள்ளமுகத் தேவியர்கள் வேண்டும். 9

கூடியணை கலவிதனி லேது—மொரு
குற்றங்குறை தானுஞ் சொல்லாக் குணமே
நீடியவளாய்ப்புருஷன் றனையே—நல்ல
நேசங்கொள்ளு நிலையுடையாள் வேண்டும். 10

நெறியொழுங்கோ ரெள்ளளவுந் தவறு—துற்று
நிதமுமிஸ்க் கீன்வரவு கண்டால்
பொறுமையோடு மொஜி பனங்கள் கொடுத்து—நல்ல
புந்தியொடு முபசரிப்பாள் வேண்டும். 11

இறைவனுக் கஞ்சியெளி யோர்க்கு—முத
லீந்துபின்னர் தானுமுண்டு மகிழ்ந்து
மறைமுறைபோ லிருகலிமாத் தனையும்—வாக்கு
மனமுமொத்து விசுவதித்தாள் வேண்டும். 12

தேவவிலக் கானஹறு மதனை—விட்டு
விட்டுஹலா லதனை யெடுத் துயந்த
ஆதிவல்லோன் றொழுகையில் ஸுஜூது—செய்யும்
அத்தலங்க ளறிந்தவர்கள் வேண்டும். 13

தீட்சைமுரீ திந்திடுமைப் பீரை—என்றுந்
தேடியுப தேசம் பெற்றே யொழிவார்
மூச்சினிலை யறிந்து கலிமாவை—யதில்
மூட்டிநினைப் பொன்று செய்தோர் வேண்டும். 14

பேச்சி விருந் தாலுங்கலி மாவை—புள்ளிற்
        பிடியாமற் றிக்கிறு செய் பவராய்க்
காட்சிக்கடி மாவதிலோ ரெழுத்தை—யூன்றி
        ஹக்கைத் தொழு திடுபவராய் வேண்டும். 15

இன்னுமுள்ள நன்னடத்தை யாவும்—மன
        தின்புகொண்டு செய்பவர்களாலே
நந்நபியே சமைத்த புசிப் பெனக்கு—மிக
        நன்றெனவும் மாதுசொலி ளுளே. 16

அறுசீர்க்கழி லடி யாசிரிய விருத்தம்.

இப்படி யறியுள்ளோர்க ளெற்கு ரெய் வளர்த்துச் சாதந்
தப்பற வாக்கித் தந்தாற் சம்பதித் தூண்பே னென்ருள்
முப்படி புகழும் வேத முஹம்மத ரிச்சொற் கேட்டே
யெப்படி யிவளுக் கன்ன மிடுவதென் றெண்ண முற்றே. 1

ஒப்பிலா தவனைப் போற்றி யறவவன் பரிமா னந்தான்
செப்பிடும் ஜிபுரீ லுக்குத் திருவுள மானுன் சொர்க்கத்
தப்பமும் பழமுஞ் சோறு மடுக்குமோ ரோடுக்குத் தன்னை
இப்பொழு தெடுத்துப் போந்தங் கியம்புதல் சேளு மன்னே. 2

கதியுறு மெனது தோழர் ஹபீபிற ஸூலை நாடிப்
பதியிழந் துயர்த்தியான பருப்பதங் கடந்து வந்த
மதியுள குறமா தெந்தன் வரிசையி னிடத்தி லுள்ளா
ளதனிணு லவளுக்கிந்த வருமொடுக் குண்ண வீந்தே. 3

அவள் வர லாற்றை யெல்லா மாதியோடந்த மாக
நவையறக் கேட்கச் சொன்மி னவிலுவா ளென்ரு ளுதி
கவினுரைப் படியே வானர் கடுஞ்சிறை விரித்துச் சொர்க்கத்
தவிரொளியொடுக்குக் கொண்டே யடைந்தன ரிறஸூல் பாலில். 4

அறையுமா ஹுடற்குற் தோன்ரு தடைந்திடும் ஜிபுரியீலு
மிறையவன் ஸலாமுஞ் சொல்லி யெழில் நபிக் கன்பி ளுேடுங்
குறமகள் வரலா றெல்லாங் கூறியவ் வொடுக்கு மீந்து
யிறகினை யொடுக்கி வானத் தினிலவர் போன பின்னர். 5

மணங்கம ழிறஸூ லுல்லா மனமகிழ்ந் தருமையான
குணங்குறி யுள்ள வந்தக் குறமகள் தன்னை நோக்கி
யுணும்படி மனமுண்டேல் நீயுண்பையிவ் வுணவை யென்று
வணந்தருனம் ஜிபுரீல் கொண்டு வந்தவவ் வொடுக்கை யீந்தார். 6

ஏதகலிறஸூ லுல்லா யீந்திடு மொடுக்கை யந்த
மாதுமே யுற்றுப் பார்க்க வழியினிற் றனக்க ணாதி
தயார வாக நல்கு மவ்வொடுக் காகக் கண்டு
கோதறு சிந்தை நன்றாய்க் குளிர்ந்திஃ தோத லுற்றாள். 7

பங்குவைப் பவர்தான் றங்கள் பட்சமா யிருக்கில் மேன்மை
தங்கிய சபையி லெந்தத் தலத்தினி லிருந்திட்டாலு
மங்களமாக வாரி வாரியே வைப்ப ரன்றோ
துங்கமா ரிறைவன் றாதே முஹம்மதே முஸ்தபாவே. 8

தேவரீ ருங்கள் பாதந் தெரிசித்த போதே யென்ற
னாவலார் பசியுந் தீர்ந்தே னரும்பவங் களைந்தேன் சொர்க்க
மேவுசிர் கதியும் பெற்றேன் வேறினி யொன்றும் வேண்டா
தேவுவப் பானே னும்வா யிருந்துற மறிவே யென்றாள்.

அப்பொழு திறஸூலுல்லா வவடனக் கறிவனேகஞ்
செப்பியுன் குலமுமிங்கன் சேர்ந்தது முரைத்தியென்னத்
தப்பற மொழிந்தா ரந்தத் தையலு மகிழ்ந்து சோதி
றப்பனைப் புகழ்ந்து வேத நபியையுந் துதிப்பதானாள். 10

எழுகட னிரு மையா யிரும்புவி மரங்க ளெல்லா
மொழிகுள கலமு மாக வும்துசிர்ப் புகழை யெண்ணி
யெழுதினு முடிவு றாம் முலிகபரப் பேறோ டுற்ற
பழுதுறா நபியே யேழை பகர்தல்கென மென்னச் சொல்வாள் 11

குறமாது நபி நாயகத்தின் தோற்ற முரைத்தல்.

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தானதனந் தனனதந் தான—தான
தாத்தத்தன தந்ததந்தந் தான

ஆதியருள் பரவு மெங்கள் ஜாதி—ஆமி
னாக்குக்குறி சொன்ன தெங்கள் ஜாதி
நீதிநெறி மேவுமெங்கள் ஜாதி—மிகு
நீள்வரிசை பெற்றகுறச் சாதி. 1

சோதிவளர் சொர்க்கபதி வேண்டி—நித்தஞ்
சுகித்திருக்கும் நல்லகுறச் சாதி
காதவழி வாடைமணந் துலங்கும்—ஒரு
ஹக்கன் ஹபீ பேயுரைக்கக் கேளும். 2

ஆதமக்க ளெவர்களையும் போல—பூவில்
அடி யூன்றுங் குறியுமுமக் கில்லைச்
சோதியுடர் சாயையது தானும்—இந்தத்
தொல்லுலகி லுமக்குறுவ தில்லை. 3

ஓதுமும துயரம்வ யதினையு—யாரு
மொருபோதுங் கண்டதில்லை யதனை
யேதமறத்தெரிந்தமட்டும் யானே—சொல்கி
றேனபியே கேளுமென மொழிவாள். 4

இத்தரைக்கி ழுமதுபசம் கறுக்கா—யிலி
னேர்சிரத்தி லிருக்கின்றது தலைதான்
முத்தியறு ஷைச்சுமக்கும் றாஹா—யீலின்
முற்படவே யிருக்கின்றது நபியே. 5

குற்றமது முமதுடலின் சாயை—இந்தக்
குவலயத்திற் றெறியாத தெதனால்
வெற்றியுறும் புவியில் நின்றும் பெரிதாய்—உம்மை
வெலவன்றான் படைத்ததனா லென்றாள். 6

அந்தமுள முமதுயுரந் தனையே—கேளும்
அஃறமதரே யெங்கணாயினாரே
இந்தவுல கேழுமுழந் தாட்கீழ்—வீசும்
பேழுமுழ தரையடவு நபியே. 7

கேமியுங்கள் மார்பினள வருஷை—முட்டி
நெடியன் தகுத் தளவினுங்கள் சிரசு
ஆமினத்தென் றுரைப்பவரீன் றெடுத்த—வய
தஃதன்றி நும் வயதுசொலற் கெளிதோ. 8

காமாவின் பிணியகற்றி யுலகில்—மிகுங்
காரணங்கள் துலக்கமுறச் செய்த
சீமானே யும்முடைய வயதை—யினிச்
செப்புகிறேன் கேளுமெங்க னபியே. 9

ஆயிரத்திற் காயிரத்திற் கதிக—லட்ச
மாம்வருடந் தனித்திருக்கும் போது
நேயமுற்றே இறைவனும்மைப் படைக்க—அவ
னினைத்தத்தன தொளியிலும்மைப் படைத்தே. 10

தானவன் முன் னிலங்கிடவே நிறுத்தி—யென்னைத்
தானறிந்தீ ரோவெனவே கேட்க
ஈனமற வறிந்தனனு னெனநீர்—சொல்ல
எவ்விதமா யறிந்தீரெனக் கேட்டான். 11

அப்பொழுதி லிறைவனைநீர் பார்த்து—நீயும்
ஆண்டவனென் றறிந்தனனு னென்றீர்
தப்பறவே மறுத்துமுமைப் பார்த்தே—யொரு
தானவனீர் யாரெனவே கேட்டான். 12

ஆண்டவன்றான் கேட்டதற்குத் தாங்கள்—உன்ற
னடிமையானு னென்றுசொல் மகிழ்ந்தே
ஆண்டவனு னென்கில்வழிப் படுநீ—ரென்ன
வவனருளக் கலிமாநீர் மொழிந்தீர் 13

ஆதரவாய் நீர்கலிமா மொழிய—அப்போ
தாண்டவனு மகிழ்ந்தறிவு சொன்னுன்
ஆதமியை வெளியாக்கிப் படைப்பே—னவர்
யாருமிந்தக் கலிமாவை மொழிய. 14

வேதம்புறக் கானையுமக் களிப்பேன்—அதில்
மிகுபெரிய ஞானங்களை யுரைப்பேன்
நீதியதின் படிநடத்து முறைபே—என்று
நிகழ்த்தியும் தொளியைரண்டாய்ப் பிரித்தே 15

அவ்வொளியை யாணும்பெண்ணுமாகச்—செய்தே
யதிலொன்றினை மறைத்துமற்ற வொளியைச்
செய்வியெக்கீன் மரத்தில்சில காலம்—மிகு
சிறப்புடைய மயிலாக்கி வைத்தே. 16

மறைத்துவைத்த வொளியை முத்தாய்த் திரட்டி—யதை
மயிலுமெடுத் தேவிழுங்கச் செய்தே
அறத்தினெக்கீன் மரத்தின்மயி லுடனே—யொன்றாய்
அபூபக்கரோ டுமறுதுமா னலியை. 17

வன்னமுள கூகைநல காகம்—சேவல்
வல்லுறிமா யமைத்திருக்க வைத்தான்
மின்னிய சிர்ப் பறவையைந்துங்கூடி—யெக்கீன்
மரத்திற் சிறப் பாயிருக்கும் போதில். 18

ஆதியினுத் தரவன்றியே தண்ணீர்—கேட்க
அவன் முனிந்து முர்தினதென் னென்றே
சோதியெக்கீன் மரமதனின் கீழேன்—மிகு
சுந்தரமாய்க் கிணறொன் றினை யமைத்தே. 19

இக்கிணற்றி லறலுண் ணுங்காளென்றே—சொல்ல
எழிலான பறவையைந்தும் பறந்தே
யெக்கியெக்கி நீரடுக்கப் பார்த்தும்—அந்நீ
ரெட்டாம லிருப்பதனாற் றினகத்தே. 20

பறவையைந்து மிருந்தமரந் தேடி—யங்கு
பறந்துபறந் தோடிவந்து பார்க்க
நிறமிகுந்த மரமிறைவன் சொல்லால்—அங்கு
நிற்காமல் மறைந்துகொண்டபடியால். 21

விரைந்துபறந் தொழிற்பறவை யைந்தும்—மிக
விடுவிடுத்தே யிறைக்கையொடிந் தயர்ந்தே
மரந்தனைக்கா ணாகந்தா முற்றே—யென்ன
மதிசெய்குவோம் யாமெனவே நினைத்தே. 22

ஆதரவொன் றின்றிமயி லழுதே—யிறை
யவனைபிழை பொருத்தின்ன வுறைக்க
நீதிறவ்ற மான்கபுல்ச்செய்துடனே—அந்த
நீண்மரத்தை வெளிப்படுத்தி னானே. 23

அந்த எக்கின் மரத்தைவெளி யாக்கிப்—பின்ன
ரைஞ்ஞூறு யிரவருடந் தானே
பிந்தியபோ தும்மைவெள்ளை முத்தில்—வைத்துப்
பிறங்கவவன் சமுகத்திலே யாக்கி. 24

அந்தமுள பறவையொன்றைப் படைத்துச்—சொல்லும்
ஆலமெல்லாங் கடுகுகளைப் பரப்பி
இந்தக்கடு குகளையொன்றொன் றாகப்—புசித்
திருந்திடுவாய் கடுகளு மொழிந்தால். 25

உன்னைமவுத் தாக்கிடுவே னென்றே—யாதி
யுரைத்தனன் கேட் டப்பறவை கடுகை
நன்னயமாய்த் தின்றுவரு கையிலே—யது
நாளுக்குநாட் குறைந்ததுகண்டஞ்சி. 26

கிழமைக்கொன்ருய்த் தின்ருகுறைந் ததனல்—மிக்க
கேவலமாய் மாதமொன்ருய்ப் புசித்துங்
கொழுமையிறுங் கடுகுகுறைந் ததனர்—பின்னர்
கூறுங்வரு டத்திற்கொன்ருய்ப் புசித்தே. 27

பறவையிருக் கையிலேகடு கெல்லாந்—தீர்ந்து
பகருமொரு கடுகிருக்கக் கண்டே
யறமயங்கி மவுத்துவரு மென்றே—கடு
கானதொன்றைச் சொண்டில் வைத்துக் கொண்டே. 28

பத்துநூறு யிரவருடந் திரிந்தே—அதைப்
பருகின தாற் புள்ளிறந்த தப்போ
தத்துவித முதலவன்றன் னருளால்—ஆதம்
அறு நூற்று முப்பதுபேர் படைத்தான். 29

பேசு மிந்த ஆதமெல்லாந் தொலைந்து—போன
பின்பு முப்ப தாதத்தையே படைத்தான்
ஆசறவே சிலகால மிருந்தே—அந்த
ஆதங்களுந் தொலைந்ததற்பி னதி. 30

பன்னிரண்டு ஆதங்களைப் படைத்துப்—பின்னர்
பகருமெட்டு ஆதங்களைப் படைத்தான்
இன்னபடி கணக்கிலடங் காத—ஆதம்
எழிலாகப் படைத்த பின்னர் மண்ணுல். 31

பன்னுமனு ஆதத்தைத்தான் படைத்தே—அவர்
பாலிலுங்க ளொளியினைவைத் தமரர்
துன்னிபடைப் பெவைகளையு மவர்க்கு—நல்ல
ஸுஜூது செய்யச் சொற்றனன் மெய் யாதி. 32

ஆதநபி யிடத்திலுங்க ளொளியை—ஆதி
யாக்கின தாற் காரணம் பல்கோடி
யோதவுண்டு மென்கினு மொவ்வாத—இந்த
வுலகிலுற்றுப் பெற்ற மக்கள் வழியே 33

உத்தமராய் வருபவர்க ளிடத்தில்—உங்க
ளொளி யிறங்கி வரச்செய்தப் துல்லாவின்
நெற்றிதனி லிலங்கைவைத்தா னய—னந்த
நேத்தியைச்சா மரசன்மக ளறிந்தே. 34

வள்ளலப்துல் லாவைமண முடிக்க—காடி
வந்த வட்கில் லாமலிறை யருளால்
தெள்ளுமாமி னர்வயிற்றி லுங்கள்—ஒளி
திகழவுற்று மானுடராய்ப் பிறந்தீர். 35

கத்து கடலுலகிலுங்கள் வயது—இந்தக்
கணக்கினைத்தான் பெருக்கில் நன்றாய்த் தெரியும்
முத்திறையு யத்திலணி குருவே—எங்கள்
முஹம்மதேனும் வயதிஃதென் றுரைத்தாள். 36

கோச்சகம்.

மாதுமொழி கேட்டு மக்கம் வாகுமஹ்மூதர்மன
மீதுவந்து சொர்க்க வியன்பட் டெடுத் தவட்கங்
கேதமறப் போர்த்தே யின்னுமுன்றன் கல்வியெல்லா
மோதுகவென் றார் சபை லுரைக்கத் துடங்கினளே 1

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

குறைஷிகள் குருவே யுங்கள் கொற்றவார் சபையி லிந்தச்
சிறியவள் கல்வி பேசத் திறமிலே னாகி லுந்தான்
மறைகளிற் கண்ட கல்வி வழுத்திடிற் பெரிதுண்டத்திற்
சிறிதிந்தச் சபையோர் கேட்கச் செப்புறே னெனச்சொல் வாளே. 1

மல்லலம் புவியி லேகன் வரவிடு மறைகடன்னில்
அல்ஹம்தென் றோதுஞ் சொல்லிற் கயன மாயிரம் பொருள்கள்
சொல்லுனு முடியா தேகன் றாதரே சுருதி வேந்தே
பல்லவர் சபைமுன் கொஞ்சம் பகர்கிறே னென்றுரைப்பாள். 2

குறமாது சபையோர் கேட்க வறிவுரைத்தல்.

வசனம்.

பொய்களிற் கொடிய பொய்யையும், கள்ளரிற் கொடிய கள்ளரையும், வேசியிற் பத்தினியையும், பத்தினியில் வேசியையும், பகலிரவில்லாப் பட்டணத்தையும், நாற்கால் மிருகத்தில் நல்லதையு மின்னதென சொல்கிறேன் சபையோரே சுகமாகக் கேட்பீரே.

பொய்களிற் கொடிய பொய் ஆண்டவனில்லை யென்பதும், கள்ளரிற் கொடியகள்ள ரறிவையறிந்து பிறருக்குச் சொல்லாதிருப்பதும், வேசியிற் பத்தினி விசுவாசத்தை யுடையாளும், பத்தினியில் வேசி விசுவாசத்தை விட்டவளும், பகலிரவில்லாப் பட்டணம் கல்பும், நாற்கால் மிருகத்தில் நாயும் நல்லது, ஏனெனில், தன்னை வளர்த்து அன்னமிடும் நாயகனைக் கண்டால் வாலையசைத்து வணங்கியே கிடக்கும் பார்த்துக் கொள்ளும் பண்புள்ள சபையோரே.

தொழுகையில்லா ரியல்பு.

தரு-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

தான தத்த தனதனன தந்தனனு தானந்
தான தத்தத் தனந்தனதத் தனதனனுந் தானம்

நானிலத்தி லறிவுமிக நல்லவரேகேளும்
தீனிலத்திற் பொருந்துமனத் திறமையுளீர் கேளும். 1

எக்கருமங் கட்குமிக எற்றமுள்ள தேதால்
ஹக்கனைதான் றொழுதிருக்குங் காரணம தாமே. 2

நாயனைத்தான் றொழுகவில்லா நரர்களிக்கு முணவை
நாயகற்கே யுணக்கொடுத்தால் நன்மைமிக வாகும். 3

தொழுகைவிட்ட தோஷிகளைத் தொடர்ந்து நன்மை சேய்தோர்
தொழுகையெல்லா முரியுமுண்மை தூயசபை யோரே. 4

தொழுகையில்லா தவனுடனே தோழமைவைத் தவர்தந்
தொழுகையெல்லா முறியுநிசந் தூயசபை யோரே. 5

தொழுகையில்லா னுயினிலுந் தோஷமுள்ளோ னெனவே
பழுதகலும் வேதத்திலே பார்த்தேன் சபையோரே. 6

தொழுகையில்லா னிறந்திடிலுந் தொட்டுக்குளிப் பாட்டச்
சுருதியிலே விலக்கெனச்சொன் னுர்கள் சபையோரே. 7

தொழுகையில்லான் மையித்தினைச் சுமக்கத்தொழு விக்கச்
சுருதியினர் விலக்கிவிட்டார் தூய சபையோரே 8

தொழுகையில்லான் மையித்தினை தூயபள்ளி தனிலே
தொட்டடக்கப் போகாதெனச் சொல்வார் சபையோரே. 9

மூன்றொருத்துத் தொழுகைவிட்ட மூடர்களை நாளை
முனுபிக்கென வெழுதும் கல முறைகொள் சபை யோரே. 10

தொழுகையில்லா னிறக்கிலவன் றுடர்காலிற் கயிற்றைத்
தொடுத்திழுத்து வீசமறை சொல்லும்சபை யோரே. 11

ஆண்டவனைத் தொழுகாத வவர்டங்குங் கபுறில்
அடிமிகுதி கொடுத்திடுவா ரமரர்சபையோரே. 12

தொழுகையில்லார் நாளையொரு துய்யவன்கேள் விகட்கே
சொல்லபதில் முடியாமற் றெரந்தறைபட் டதனுல் 13

முழுதுமுடல் வெயர்த்துமதி முகங்கருத்தும் பெரிதாய்
அழகுவர்க ளவஸ்தைமிக ஆகுஞ்சபையோரே 14

அறுசீர்க்கழிலடி யாசிரிய விருத்தம்.

தொழுகையை விட்டோர்க்கின்னுஞ் சொல்லனுத் துயரமுற்றும்
பழுதினி லாகியென்றும் பாதவித் திடுவாத்தை
யெழுதொணு திம்மட் டென்று மியம்பிடு மஹ்ஷர் மீது
வளறும் வட்டிதின்போர் வருத்தத்தைச் சொல்வேனே.

மஹ்ஷரில் வட்டி முதலிய கெட்டசெயலார் படுமியல்பு.

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தனதனனு தானதன தாந்தா—தந்த
தந்ததனத் தனத்தனன தனனு.

மஹ்ஷரிலே வானமது தாழ்ந்தே—யிந்த
மண்ணுலகுக்கணித்திலுற மதிலே
பகலவனின் சூடுமிக வாகி—யெல்லாப்
பருப்பதமு முருகிப்பாவா யோடி. 1

மேடுபள்ளம் யாவையுமே நிரப்பு—மந்த
வெயிற்கொடுமை சொல்வரிதப் போது
நீடுமெழு வானும்படு வானு—மொரு
நீரக்காக விருக்குமந்த வெளியில். 2

வட்டிதனை வாங்கித்தின்போர் வயிறு—வீங்கி
வானத்தைப்போ லாகியவர் நடைதான்
முட்டியுழன் றேகிடந்து புரள்வார்—அதை
மொழியமுடி யாதுசபை யோரே. 3

விற்பனையிற் கொடுமைசெய்த பேர்கள்—அந்த
வெயிலினிறை முன்வில்வெந்து சுழன்று
துற்பலமாய்க் கிடப்பரந்தக் கொடுமை—யார்க்குஞ்
சொல்லமுடி யாது சபை யோரே. 4

கோட்குண்டுணி பொய்புரணி சொல்வோர்—அந்தக்
கொடும்வெயிலிற் கிடந்தவஸ்தை பெரிதாய்த்
தாட்கணடை யற்றுருண்டு கிடப்பார்—அதைச்
சாற்றமுடி யாதுசபை யோரே. 5

காலையிலே யெழுந்திருந்து முழுக்கை—நீக்கி
கார்த்தனைதொ ழாதவர்கள் தானே
காலைவெயிற் சூட்டினிலே கிடந்து—தகை
தான்பெரிதாய்ச் சுழல்வர்சபை யோரே. 6

சூதுவிளை யாடுகின்ற பேர்கள்—வெயிற்
சூட்டினிலே கிடந்துகைகாற் சோர்ந்து
பாதகபா தகமெனவே புலம்பி—மிகப்
பரதவிப்பார் காணுஞ் சபையோரே. 7

கள்ளஸினுச் செய்யுமவர் தானே—யந்தக்
கடும்வெயிலிற் கிடந்துரண்டு புரண்டு
பள்ளிவிலாப் புறம்வெடிக்கக் கதறி—மிகப்
பரதவிப்பார் காணுஞ்சபை யோரே. 8

புருஷன் சொல்லைத் தட்டிவிட்டு நடந்த—அந்தப்
பூவையர்கள் வெயிலில்வந்து கரிந்து
வரிசைகெட்டுத் தடுமாற்றங் கொண்டு—தங்கள்
மனமுருகி நிற்பர்சபையோரே. 9

இந்தவிதக் கெடுசெயலோ ரெல்லா—மந்த
வெரிவெயிலிற் கிடந்துருளும் போதே
யன்னவர்களிடத்தில்பெருங் கேள்வி—கேட்டே
யரியவனு நரகிற்கனுப் பிடுவான். 10

கோச்சகம்.

கெட்டசெய லோரிறைவன் கேள்வியிலே குற்றமுள
மட்டியார்க ளாகவெரி மன்னுநர கம்புகுதக்
கட்டளைக ளாகுமந்தக் காலையில்வா னோர்வரைப்
பொட்டெனவே கூட்டிக்கொண்டு போய்வருத்தஞ் செய்வாரே.

முழுக்கு முதலிய கெடுசெயலுள்ளோ ரியல்பு.

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தனத்தனன தாந்தனன தந்த—தன
தனத்தான தனந்தனன தனன.

முழுக்கினிலே மூன்றுபறு வுண்டு—மதை
முழுக்காலி ரறிந்துஸுபுஹினிலே
முழுக்கிறுக்க வேண்டுமந்தப் பறுலை—யிங்கே
மொழியுகிறேன் கேளுஞ்சபை யோரே. 1

நினைப்புடனே நனைப்புடல மெல்லாந்—தேய்ந்து
நீவித்துசு கரப்படுத்த வேண்டும்
வினைப்பகுதி யுடன்முழுக் குண்டான—அந்த
விதமறிய வேண்டுஞ் சபையோரே. 2

முழுக்குவைத்து கொண்டுகுளி ரெனவே—தூங்கும்
மூடர்களை நூறாண்டு நெருப்பில்
வழுவறக்காய் ஜலத்தையவர் மேலே—யூற்றி
வருத்தஞ் செய்வார் காணுஞ்சபை யோரே. 3

அச்சலத்திலோர் துளித்தான் புவியில்—வீழ்கி
லரியகல்லு மிரும்புமெழு காகும்
நிச்சயமீ தாகுமுயர் வான—தீனி
னேசமிக வான சபை யோரே. 4

முழுக்கைவகுத் துடன்முழுகித் தலையை—வெள்ளை
முகிர்த்துகிலாற் றுடைக்கையிலோர் துள்ளி
வழுக்கிஜலம் விழுகில் துவா வானோர்—செய்வர்
வரிசையவர்க் காகுஞ்சபை யோரே. 5

தொந்தமதா யவர்செய்யும் பாவமுமே—தூரந்
துலைந்து துள்ளிபறந்தகலு மவர்கள்
அந்தமுள விறைவனிதம் பகிரும்—அந்த
அன்னத்திற்கு முதலாக் விருப்பார். 6

முழுக்குவிதித் திடமுன்முழுக் கறக்க—வேண்டு
முழுக்குவிதித் தாளறக்க முடியா
தொழுக்கமுட னிஃதறிய வென்றால்—ஒரு
பாயமுண்டுங் கேளுஞ்சபை யோரே. 7

லாஇலாஹ இல்லல்லாஹென் றுரைக்கு—மந்த
நற்கலிமாத் தனிலைந்தெழுந் துண்டும்
காயமதி லைந்திடத்தி லூன்றி—யொரு
கணக்காகப் பழக்கஞ் செய்து வந்தால். 8

முன்னர்சொன்ன முழுகறுக்கும் விதங்க—ளெல்லா
முற்றுநன்றாய்த் துலங்கிமுன்னி லிலங்கும்
அன்னவெழுத் துந்தலமுந் தானே—யுங்கட்
கருளுகிறேன் கேளுஞ்சபை யோரே. 9

அஞ்சுவன்னந் திரண்டு மஞ்ஞை வடிவா—யாகி
அஹ்றமதென்று முஹம்மதென்று பிரிந்த
அஞ்செழுத்தில் ரண்டெழுத்தைவிட்டு—விட்டே
யழகுதரு கின்றமூன்று மெழுத்தை. 10

அகாஇக ரத்தினொடும் உகர—மென்னும்
அவ்வாச விடந்தனிலே வீசிப்
பசருமொரு பஞ்சவணக் கோட்டை—தன்னைப்
பார்க்கிற்பரன் சூட்சமது தெரியும். 11

இல்லெழுத்துத் தானிருக்கு மிடத்தை—நல்லி
லாகியனுங் காவல்வைத்துக் காத்தால்
அல்லென் றுசொல் விளக்கொளியை யறிந்து—கொள்ள
லாகுமறி யார்நரகில் வீழ்வார். 12

தொழுகையில்லாத் தோஷிகளை நரகில்—வானர்
சுடச்சுடவே போட்டெரிப்பா ரவர்கள்
அழுதழுது புரண்டுருண்டு கொடுமை—யான
அவஸ்தைபடு வார்கள்சபை யோரே. 13

விட்டுவிட்டுத் தொழுபவரை நரகில்—மிகு
வேதனைகள் செய்துபல மாகக்
கட்டி யுருட்டிடுவரந்தத் துன்பம்—யாருங்
கவலவரி தாகுஞ்சபை யோரே. 14

தொழுகையைக்கே வலத்துடனே பேசு—மந்தத்
தோஷிகளை நரகினிலே பெரிய
கழுதைவடிவாக்கியத்தின் வாயில்—முள்ளுக்
கடிவளமிட் டிழுப்பர்சபை யோரே. 15

கோச்சகம்.

இன்னபடியே தொழுகைக் கிடறு செய்த பேர்களைத்தான்
வன்னிநர கத்தின்மிகு வாதனைசெய் வார்களின்னும்
பொன்னிதியுள் ளோர்கள்ஸக்காத் துப்புரியா தேயிருந்தா
லன்னவர்பட் டேயுழலு மாதாபுகளைச் சொல்வாளே. 16

ஸக்காத்து முதலிய தீயக்கெடுதலுள்ளோ ரியல்பு

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தனத்தனனத் தனனதனந் தானந்—தன
தந்தனதந் தாத்தனத்தந் தான.

உரைக்குமறைப் படிவருடந் தோறும்—பொரு
ளுள்ளவர்கள் நாற்பதுக் கொன்றாகத்
தரைக்கண்ஸக்காத் தெடுத்தளிக்கவேண்டு—மதைத்
தவறவிட்டோர் கெடுவர்சபை யோரே. 1

தேடுந்திர வியங்குறையு மென்றே—யெண்ணிச்
செப்புஸக்காத் தெடுத்தளிக்கா தவரை
மாடுகளைப் போலடித்து நரகி—லுள்ள
மண்சுமக்கச் செய்வர்சபை யோரே. 2

நம்பொருளைப் பிறருக்களிப்பானே—னென்று
நாடிஸக்காத் துக்கொடுக்கா தவரை
வம்புநா கத்திலுள்ள மலையை—யவர்
மார்பினில்வைப் பார்கள்சபை யோரே. 3

பொருளைநல்ல வழியிற்சாம்பா தித்தே—ஆதி
புகன்றஸக்காத் தெடுத்தளிக்கா தவரை
நிரையமதில் நெருப்பரவு தேளும்—நாயு
நெஞ்சைப்பற்றி யிழுக்குஞ்சபையோரே. 4

இப்படிய னேகவித வருத்தம்—ஸக்காத்
தெடுத்தளிக்கா தவரைசெய்கு வார்கள்
செப்புமின்னும் பிறருடமை யெடுத்தோர்—தம்மைச்
செய்யும்வருத் தங்களைச்சொல் வேனே. 5

பிறருடைய வுடமைகளை மோசஞ்—செய்யும்
பேர்களைத்தா னெரிமிருந்த நரகிற்
கறுவொடுமே புலிகடுவாய் வந்து—நன்றாய்
கடித்திழுத்தே யுலைக்குஞ்சபை யோரே. 6

சிறியஎத்தீ முடமைகளை கபடஞ்—செய்து
தெட்டியுண்ணு மவர்கள் சரீரத்தின்
கறியைவகிர்ந் தருநரக நெருப்பி—லிட்டுக்
கருகசுடு வார்கள்சபை யோரே 7

பொட்டைப்படி கோல்முழங்கொண் டளக்கு—மந்தப்
பொல்லாத தோஷிகளை நரகிற்
கட்டிநெருப் பெடுத்தவர்கள் கையில்—நன்றாய்க்
காயவைப்பார் காணுஞ்சபை யோரே. 8

களவுசெய்த பேர்களைத்தா னரகில்—வெந்த
கரும்பொன்னதின் சங்கிலியாற் கட்டிப்
பளபளென வடிகள்பல வடித்து—நிதம்
பாழறையில் வைப்பர்சபை யோரே. 9

பொய்புரணி சொல்பவரை நரகி—லுள்ள
புகையறையிற் சிறைசெய்தவர் தம்மை
வெய்யசுடு கோலதினு லெய்தே—யவர்
மேனியெல்லாந் துளைப்பர்சபை யோரே. 10

கோட்கள் சொல்லும் பாவிகளி னுக்கை—தீயின்
கொளியரவு வந்திழுத்துக் கொண்டே
தூட்படவே நரகமெங்குந் திரியு—மந்தச்
சூடுபெரிதாகுஞ்சபை யோரே. 11

அசலிலுள்ள மாதரைக்கண்ணாலே—பார்த்தே
யாசைவைப்போர் கண்ணிற்கும் நெஞ்சிற்கும்
மசியவெந்த நரகக்குறட்டாலே—நன்றாய்
மாட்டியிழுத் தெறிவர்சபை யோரே. 12

கணவன்சொல்லைத் தட்டிவிட்டு நடந்த—கெட்ட
காரிகையார் தம்மைக்கின் ஸாருக்கித்
தொணதொணென்று நரகிற்சுற்றித் திரியச்—செய்து
தூரத்தியடிப் பார்கள்சபை யோரே. 13

தலைதிறந்து கேவலமாத் திரியு—மங்கத்
தையல்களின் றலைமுடியைப் பிடித்தே
அலைவிதமா யிழுத்துயரக் கட்டி—யூச
லாட்டிடுவார் நரகில்சபை யோரே. 14

கள்ளஸிணுச் செய்யுமடவாரை—யாருங்
காணாமல் நரகிலிருப் பேழை
யுள்ளிருத்தி நெருப்பரவி தேளை—விட்டே
யோடிக்கொத்தச் செய்வர்சபை யோரே. 15

வாய்வம்புகள் பேசுமடவாரைத்—தீயில்
வழுவறக்காய்ந் திடுமிரும்பை வைத்தே
காய்நரகில் வேதனை செய் கின்ற—அங்கக்
கடுமையவர் சொல்வர்சபை யோரே. 16

தாய்தகப்பன் பிறவினத் தாரை—யென்றுஞ்
சங்கைசெய்யா மங்கையரை நரகிற்
காய்நெருப்பிற் கிடத்தியதா பதிகளுஞ்—செய்வர்
கழறவது பெரிதுசபை யோரே. 17

மாமியைப்பே ணுதமரு மகளை—யந்த
மருமகளைக் கொடுமைசெய்மா மியரைத்
தாமதியா தேநரகின் கீழே—நிதந்
தாழ்த்தியிழுப் பார்கள்சபை யோரே. 18

பசித்தவர்கட் கன்னம் பதிர்ந் துண்ணு—துற்ற
பாவையர்கள் வயிற்றைநர கிடத்தில்
அசைத்தகொம்பு நெருங்குங்கடாய் விட்டு—முட்டு
யலக்கழுயச் செய்வர்சபை யோரே. 19

இப்படியே கெடுசெயலுள் ளோர்கள்—நெருப்
பெரியுநர கத்தினிலே கிடந்தே
யொப்புவமை சொலற்கரிய துன்பப்—பட்டே
யுழன் றிடுவார் காணுஞ்சபை யோரே. 20

நோன்பு நோற்றற் கிடையூறுசெய்வா ரியல்பு.

கொச்சகம்.

ஆதியருள் செய்தபறு லானவந்த நோன்புகளை
வேதனைய தாகவெண்ணி விட்டுவிட்ட பேர்நரகி
லேதமுறு துன்பத் தினிலிடையும் வாறுகளை
யோதிடுவேன் கேளுஞ்சபையோரே யெனபபுகல்வாள்.

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தானதனந் தனந்தனன தான—தாந்த
தந்தனன தாத்ததத்த தாந்தம்.

ஆதியவன் மொழிந்தபறு லான—நோன்பை
யஞ்சியத பாய்பிடிக்க வேண்டு
ஓதிமதிற் பறுலிரண் டுண்டதனை—நன்று
யுரைக்குகிறேன் கேளுஞ்சபை யோரே. 1

மொழியுகின்றன நிய்யத்தொன் று நோன்பு—தானு
முடியாமற் பேணலொவ் று தானே
யழியுகின்ற முறிவுபத்து நோன்பில்—அதை
யறையுகிறேன் கேளுஞ்சபை யோரே. 2

மறந்திடுதல் தின்றிடுதல் குடித்தல்—ஒரு
வஸ்துவைத் துவாரத்திலே புகுத்தல்
பறந்துசேர்க்கை செய்தல்விந்தை வெளியில்—வரப்
படுத்தல்சத்தி யெடுத்தல் புத்தி மறைத்தல். 3

குபிரினிலைப் படுதலிவையெட்டும்—இரு
கூட்டத்தார்க்கும் பொதுவாகும் பெண்கள்
கவியும்ஹியி லாதல்பிள்ளைப் பெறுதல்—சதைக்
கட்டிவிழ லாகுஞ்சபை யோரே. 4

சொல்லுமிந்த இயல்புடைய நோன்பை—யாரும்
சுகத்துடனே பிடிக்காம லிருந்தால்
வல்லநர கத்திலவ ருடலைத்—தீயில்
வாட்டியெடுப் பார்கள்சபை யோரே. 5

களவிலுண்டு தின்றுகொண்டு வெளியில்—நோன்புக்
காரரைப்போல் வருபவரை நரகில்
உளவுதெரியா தவிரு ளறையிற்—போட்டே
யூட்டிடுவார் நெருப்பைச்சபை யோரே. 6

ஊணைவிட்டு நோன்பு வைத்துப் பசியாய்—நித்த
முற்றதினுற் பலனென் னென்று சிலபேர்
ஆணவத்தாற் பேசுமவர் நரகில்—மெத்த
வவஸ்தைதப்படு வார்கள் சபை யோரே. 7

இவ்வித நோன் புக்கிடறு சொல்வார்—தம்மை
யெரிநரகிற் புலிகாடி யோனுய்
கவ்விக்கடித் திழுத்தெரிந்து தானே—யெங்கும்
காட்டிக் கொண்டு திரியுஞ் சபையோரே. 8

நன்மைநம லானிற்பறு லான—நோன்பை
நாடிப்பிடித் தவர்களிறை சமூகந்
தன்னில் மிரு மழகுடனே யவனின்—கேள்வி
தனக்குச்சபா வளிப்பர் சபையோரே. 9

நீடுமஹறு ஷறுதனிலே நன்மை—தீமை
நிறுக்குந்திரா சிடத்தில் நோன்பு பிடித்தோர்
நாடுநன்மைத் தட்டுக்கனத் தவர்கள்—சொர்க்க
நகரம்புகு வார்கள் சபையோரே. 10

சிறு பிள்ளைகள் பிடிக்குகின்ற நோன்பு—பெற்ற
திருத்தகப்பன் தாயார்கட்கு மாகும்
பெறுபலன்கள் கோடியத னலே—யாதி
பிரியம்வைப்பான் காணுஞ் சபையோரே. 11

றமலானினற் பறுலாகிய நோன்பு—முதல்
நாட்பிடிப்போர் பேரிலிறை யிரங்கி
யிமயவரை வரிசைகளைச் சொரியச்—சொல்லி
யேவிடுவான் காணுஞ் சபையோரே. 12

வல்லவன்றன் றஹ்மத்துட னந்த—மாதம்
வழுத்துகின்ற நோன்புபிடித் திடுவார்
நல்லவஜீ பனமாக்கித் தாமுந்—தின்று
நட்பினெளி யோர்களுக்கு மீந்தால். 13

சொல்லமுடி யாதநன்மை கிடைத்து—மிகு
சொகுசுடனே சொர்க்கநக ராள்வார்
இல்லையென்று யெளியவரைத் துரத்து—மவர்
எழ்நரகு மாள்வார் சபையோரே. 14

நவிலு நோன்பு முப்பதையும் பிடித்தோர்—பெரு
நாளையிலே ஹபிறுகயி ருத்துந்
திரவியபித்து ருவுங்கொடுத் திடிலோ—வொளிர்
ஜென்னத்திலே வாழ்வர் சபை யோரே. 15

கொச்சகம்.

பேசுகின்ற நோன்பதனைப் பேணுதலா கப்பிடித்தோ
ராசைநிறை வேறிச்சொர்க்க மாள்வா ரிஃதன்றியே
காசுடைய வாசைவைத்துக் கயிறுஹறயி ரூத்தியாத்
தோஷியர் படுந்துயரஞ் சொல்கின்றேன் நன்றாய்க்கேளீர்.

தீவினையோர் நரகிற்றிறங் குலைந்து புலம்பல்.

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தாத்ததன தனத்தனன தனதாந்—தான
தந்ததனந் தனதனதத் தனத்தம்.

மார்க்கநெறி களுக்கிடறு புரிந்தோர்—ஈயா
வம்பரிவர் களேநரகிற் படுத்தும்
மூர்க்கவினை பொறுக்கரிதா யழுதே—யவர்
முறைசொல்லுதல் கேளுஞ் சபையோரே. 1

பெண்டுமக்க ளுடன்மனை யிலிருந்தே—மிகு
பெருமைசெய்தோ மப்பொழுதே மையர்கள்
கண்டுஹறயிற் கேட்கிற் கடிந்தோமே—யிப்போ
கடுநரகி லெய்பட்டுக்கொண் டோமே. 2

மனைகளெங்கே போச்சு தந்த வாழ்வும்—சேர்ந்த
மனைவியெங்கே போச்சு துமா டாடும்
இனவரெங்கே போச்சு துநாம் சுகிக்கும்—அந்த
இன்பமெங்கே போச்சுதென்று யழுவார். 3

பணங்களெங்கே போச்சு துநாம் தேடும்—அந்தப்
பலமண்டங்கள் தானுமெங்கே போச்சு
மணங்களெங்கே போச்சுதெளி யோரை—வைத
வாயுமெங்கே போச்சுதென்றே யழுவார். 4

பட்டுடைகள் தங்கநகை யெங்கே—போச்சு
பல்லக்கெங்கே போச்சு துநா மேறும்
மட்டமெங்கே போச்சு துபூந் தோட்டந்—தானும்
வளர்த்ததெங்கே போச்சுதென்றே யழுவார். 5

பிறர்பொருளை பகடமா யெடுத்து—வைத்த
பெட்டியொடு பொருளுமெங்கே போச்சு
ஷறஹுநெறி தவறவிட்ட படியா—லிந்தத்
தழலிவேக லாச்சுதென்றே யழுவார். 6

இந்நெருப்புக் கிட்டுமென்றே முன்னர்—நமக்
கெள்ளளவுந் தெரியாமற் போச்சே
நன்னய ஆலிம்கள் சொல்லும் பேச்சைக்—கேட்டால்
நரகில்விழ மாட்டோமேயென் றழுவார். 7

நரகமுண்டும் வேதப்படி பயந்து—நீங்கள்
நடங்களென்று பெரியர் சொன்ன சொல்லைப்
புரையென்றன மிப்பொழுது குரங்கு—மாப்புப்
பிடுங்கப்போன கதையாச்சுதென் றழுவார். 8

கொடியஅதா பினுக்கயர்ந்த ஞதி—தன்னைக்
கூவியெங்கள் பிழைபொறுப்பை யென்பார்
நெடியனப்போ தவர்க்குப் பிழைபொறுக்கு—மந்த
நீள்தலமீதி லேயெனவே யுரைப்பான். 9

இப்படி யதாபுடையோ ரெல்லா—மிக்க
வெழில்பரவு நபி முஹம்ம தவர்கள்
தப்பறுஷபா அத்ததி ஞலே—பிரு
தவ்சென்றிடும் சுவர்க்கபதி யாவார். 10

111392

கோச்சகம்.

மாறுபகர் காபிர்களை மாளவெட்டித் தீனிலாம்
வீறுபெற வெங்கும் விளக்குநபி நாயகரி
ஞறுபெறு பேர்கள்செய்யு மதபுக்குறை வான்மிடிமை
வேறுபடல் கேளுஞ்சபை மேவுநர்கா ளென்றுரைப்பாள்.

தந்தஞ் செய்கையாற் றமக்கு மிடிமையுறல்.

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

தாத்ததன தனதத்தனுந் தனன—தத்த
தாத்ததன தானதன தனத்த.

நாற்பலைது கருமத்தினல் மிடிமை—யிந்த
நானிலத்தி லாகுமதை விரித்துத்
தோற்பறவே விளங்கன்றாய் நானு—மிங்கே
சொல்லுகிறேன் கேளுஞ் சபையோரே. 1

நீர்க்கரையில் நடைவழியிற் பலரும்—வந்து
நிழற்கிருக்கு மரத்தடியிற் ருனே
பார்க்கண்மல வாதை செய்வோர் களுக்கோர்—ஆதி
பான்லலைனத் திறங்குஞ்சபையோரே. 2

மாலேமக ரிபுவகுத்திற் றூனே—வீட்டு
வாசல்விளக் கேற்றிவைக்கா தாலும்
காலேயிலே விழித்துமுழுக் கறுத்தோ
ஹறக்கைத்தொழாக் காரியத்தி னூலும். 3

வெயிலெழும்ப முனமுற்றமும் வீடும்—நன்றாய்
விளக்கிவையாக் காரியத்தி னூலும்
கயிடிரணம் வருக்குமலக் கவருந்—தூரக்
கடிந்துகடந் திடுவர்சபை யோரே. 4

இன்னதறி யாமலெனக் கிரணம்—ஆதி
ஈயவிலே யென்றுசில பேதை
நின்னயஞ்சொல் வாரிரண மாராற்—றப்பி
நின்றதுதான் பாருஞ்சபை யோரே. 5

இன்னுமிடி மைகள் வருவ தெதனு—லெண்ணி
லென்னேப்போலோற் சமர்த்தரிலே யென்றே
தன்னேமறந் தேபெருமை பேசும்—அவர்
தன்மனேபா ழாகுஞ்சபை யோரே. 6

செம்மைகெடும் வாய்மதங்கள் பேசி—வம்பு
செய்துவழக் கோரஞ்சொல்வோர் மனேயும்
பொம்மைவிளை யாடுமவர் மனேயும்—பாழாய்ப்
போய்க்கெடுவார் காணுஞ்சபை யோரே. 7

கல்வியுள்ளோர்க் கிடறுபுரிந் தவர்கள்—மனங்
கலங்கும்படி செய்தவர் மனேயும்
நல்லகும ரிருந்துபெரு மூச்சு—விட்டு
நடக்குமனே யதுவும் பாழாகிடுமே. 8

வெடிசிரிப்பீ மானேத்தின்ப துடனே—யவர்
வீட்டி லுள்ள பறகத்தெல்லா மழிக்கும்
கடுகடுத்தே மனுடர்முகம் பார்த்துப்—பேசுங்
கபடர்முகங் கறுக்குஞ்சபை யோரே. 9

வாசல்முன்னே மூத்திரம் பெய்தாலும்—இன்னு
வாசற்படி மேலிருந் துண்டாலும்
வாசல்முன்னே குப்பைகளேக் கூட்டி—வைத்து
வாரியெடுக் காமலிருந் தாலும். 10

வாசல்முன்னே தோஷிகள்தா னிருந்து—பல
வார்த்தைகளேப் பேசியிருந் தாலும்
பேசமுடி யாமிடிமை மலேபோல்—வரும்
பெண்களினுற் காணுஞ்சபை யோரே. 11

வாடியபூச் சூடிகினு மிடிமை—கெட்ட
வளர்ந்திலொன்றை வைத்துயுண்கினு மிடிமை
கோடியுடுத் தேபெருமை யாக—நடை
குலுக்கிநடக் கினுமிடிமை யாமே. 12

தாடிபணி செய்திடினு மிடிமை—ரெம்பத்
தனக்கு மூத்த பெண்ணைப்புணர்தல் மிடிமை
கூடிக்குஸால் வைப்பதுவு மிடிமை—யிவை
குறைகளிலா மிடிமை சபை யோரே. 13

துரும்புகையி லெடுத்துப்பல்லைக் குத்தி—யத்தாற்
சொல்லும் விளக்கைத் தீண்டுவது மிடிமை
இரும்புவளை பூட்டுவது மிடிமை—வீட்டி
லிருந்துதலை திறப்பதுவு மிடிமை. 14

பெருநித்திரை பெருந்தீனது மிடிமை—சோற்றைப்
பெரும்பிடியாய்ப் பிடிப்பதுவு மிடிமை
வரும்பெரிய மூத்தவய தினர்க்கு—முன்னர்
வழிநடந்து போகுதலு மிடிமை. 15

தலைமுடிவார்ந் ததில்விழுந்தமிடிமை—நன்றாய்த்
தக்கைசெய்து வீட்டிறப்பில் வைக்கில்
வலமையுள தன்புருஷ ருக்குத்—தாங்கள்
வஞ்சனைசெய் ததனை யொக்கு மாமே. 16

பல்லுக்கறை நகங்கள் கொண்டுங் கத்தி—கொண்டும்
பலதினமுஞ் சுறண்டுவது மிடிமை
நல்விளக்கைத் துரும்பன்றியே விரலால்—எந்த
நாள்கள்தோறுந் தீண்டுவது மிடிமை. 17

கழுகாமல் விளக்குகளை நிதமு—மதின்
கறையுடனே யேற்றுவது மிடிமை
முழுவயிற்றிற் குணவுண்ணலு மிடிமை—பிறர்
முன்னிலபந் திறக்குவது மிடிமை. 18

மாலைமஹ ரியுவகுத்தில் முட்டை—யுப்பு
மணிபொன்வெள்ளி வழங்குவது மிடிமை
சிலமடவார்களபந் தன்னைச்—சேர்க்கை
செய்யும்பொழுது பார்ப்பதுவு மிடிமை. 19

கோலெடுத்துப் பூமியைத்தான் கீறி—நித்தங்
கொஞ்சிவிளை யாடுவது மிடிமை
சேலின்விழி மாதரொடு பகலிற்—சேர்க்கை
செய்வதுவுந் தானரிய மிடிமை. 20

அனுதினமுங் கவலைகொள்ளல் மிடிமை—சுகிப்
பதில்விருந்தில் லாதுண்பது மிடிமை
வனிதைமட வானிருக்க வவளை—தூர
வைத்துத்தனி துயில்வதுவு மிடிமை. 21

வெங்காயத்தின் தோலடுப்பிற்றானே—மாட்டி
விடுவதுவுந் தானரிய மிடிமை
மங்கையர்கள் வாழ்வினிலே மிகவும்—செட்டு
வைப்பதுவுந் தானரிய மிடிமை. 22

உடுத்தாடை தனைக்களையா ததனின்—பீற்ற
லூசிகொடு தைப்பதுவு மிடிமை
யெடுத்ததயிர் வெங்காயங் கசட்பு—மிவை
யிரவையிலே யுண்பதுவு மிடிமை. 23

ஆடவர்க ளிடதுபுற மதிகம்—படுப்
பதுவுஞ்சுடச் சுடவன்னத்தைத் தானே
கூடியிருந் துண்பதுவு மிடிமை—பூமி
குலுங்கநடை செய்வதுவு மிடிமை. 24

நெற்றியிலே பயந்தனிலே கையை—வைத்து
நித்திரைசெய் வதுமிடிமை தண்ணீர்
மற்றுநின்றே யருந்திடுதல் மிடிமை—வெள்ளி
வாறத்திலே பஞ்சுவெட்டல் மிடிமை. 25

கொண்ட பெண்ணைத் தாயென்றிடி—லதற்குக்
கூறுந்தெண்டங் கொடுக்கினுமே மிடிமை
ஒன்டொடிதான் துடக்கிலுறும் போது—தூர
வொதுங்கிநடக் காததுவு மிடிமை. 26

ஓதுமெக்தீ மானவர்பார்த் திருக்க—அன்ன
முன்பதுவு மிடிமைபொது நிலத்தின்
மீதுகுடி யிருக்குதலு மிடிமை—கெட்ட
வேடிக்கைகள் பார்ப்பதுவு மிடிமை. 27

விளக்குநிழல் துடப்பத்தூசி மீதும்—நித்த
மேவியிருப் பதுமிகவு மிடிமை
அழுக்குடைக ளுடுத்துவது மிடிமை—பெண்க
ளணிதுணியா டவரணிதல் மிடிமை. 28

இந்தவித மிடிமையனே கங்க—ளுண்டு
மியம்பிலவை விரியுமுங்க ளுடைய
சிந்தையினுந் தெரியவரு—மிப்போ
செப்புவே னவாவைச்சபை யோரே. 29

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

அவாவதின் குணத்தி னாலே யமைத்திடு மிரண மெல்லாம்
அவாவதின் குணத்தி னாலே யகன் றிடு முகல மீதின்
அவாவதின் குணத்தி னாலே ஹயாத்துமே குறைந்து போகும்
அவாவதா செய்த பாவ மகன்றிடா தப்பாற் றானே. 1

தரையிற்றன் குணத்தி னாலே தனக்குண்டா மிரண மெல்லாம்
வரை தனிற் பெய்த நீதான் வடிந்தப்பாற் செல்லல் போலும்
விரிபுனற் குமிழ் வற்றி விடுவதைப் போலும் பூவிற்
பரிவுறு சபையினாரே யென்றினும் பகர லுற்றாள். 2

பல கெடுதலினாலே பாடுபடுதல்

கண்ணிகள்-இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

தன்னை மதிப்புடையோர் தான்சறு கிப்பாலமதில்
நின்னயம தாய்விழுந்து நெடுநாட் கிடப்பார்கள். 1

விண்ணுல கமைத்தவிறை மேல்விருப்ப மில்லார்கள்
மண்ணிலடங் கும்பொழுது வானமலக் கானவர்கள். 2

நண்ணியுனைப் படைத்த நாயனுந் தானாரெனவே
திண்ணமுறக் கேட்டுத் தெண்டனைகள் செய்வாரே. 3

தன் புருஷ னேடுமங்கை சண்டைநிதஞ் செய்தாலும்
மன்னுவினைச் செய்தாலும் வாழுமனை பாழாகும். 4

சீர்கெடுதி யானபெண்கள் சித்தமொன் றைத்தானினைந்து
கூர்விழிநீர் விட்டழுமக் குடிமனையும் பாழாகும். 5

அன்னமிக வுன்போரு மாடையழுக் காவோரும்
கன்னியைக்காண் போதினெல்லாங்கணிந்து சேர்க்கை செய்வோரும். 6

விண்ணோர் முனிவினுக்கும் வேதனைக்கு மாளாகி
நண்ணுவர் கியாம நாள்மட்டும் சபையோரே. 7

என்பாகாணி யென்றுசொல்லி யெளியர்நில மாட்சிசெய்தோர்
பன்னுபன்றி யாய்க்குறைநோய் பற்றுகின்ற மாடதுபோல். 8

உருகியெரிந் தாகிறத்தி லுடல் முழுதும் வேறாகிக்
கருகி யெலும் பெழும்பிக் கரைந்துநின்று வாடிடுவார். 9

அப்போ தவரையண்ட ரடுத்துநின்று பாவிகளே
யிப்போநீ ராண்டநில மெங்கெனவே தூஷணிப்பார். 10

கொண்டை பிளந்துகட்டுங் கோதையர்கள் தன்றலையி
லண்டர் நெருப்புச்சட்டி யதனைவைத் தெரிப்பார்கள். 11

அன்றவர் படுந்துயர மாதியரு ளாலிறஸூல்
மன்றாடி யேவிலக்கு வார்காண் சபையோரே. 12

ஹக்கை நினைந்துதௌபாக் கழறார்க ளாகிறத்தில்
றக்கபெருங் கேடுமவன் றன்முனிவுங் கொள்வார்கள். 13

நீணிலத்தில் யாதொருத்தர் நேருமுறை யோராமல்
ஆணைசக்தி யம்புரிவோ ரலக்கழியச் செய்தவர்கள். 14

நாக்கைக் குறடுகொண்டு நன்றாய்ப் பிடித்திழுத்துத்
தாக்கி யடித்திடுவார் தடிகொண்டு வானவரே. 15

நன்றா யிருக்கையிலே நவில் தவுபாச் செய்தார்
நின்றே மலக்குயிரே நீக்கையில்தௌ பாக்கள் செய்தால். 16

வல்லான் கபுலாக்க மாட்டானதற்கு முன்னே
எல்லோருந் தான்தவுபா எடுத்துவர நன்றாமே. 17

கல்லை மாத்தையிந்த காசினியில் நாயனென்ற
பொல்லாக் குபிரர்பிழை பொறுக்கானே வல்லவனும். 18

இல்லாப் பெரும்பிழையை யான்கண்டேனென் போர்களையும்
சொல்லா லொருவர்கல்லைத் துடிக்கநோவிப் போர்களையும். 19

அல்லாவுடனிறஸூ லழகிய தங்குருமார்
நல்லோர் புருஷன்சொல்லை நாடாத தோஷியரை. 20

கூட்டியவர்நாவிற் கொடுந்தூண்டில் போட்டிழுத்து
வாட்டி வெகுகாலம் வைப்பா ரெரிநரகில். 21

வீட்டுக் கணவன் முன்க வெடுக்கெனப்பேச் சிட்டவளைக்
காட்டுப் புலிக்கிரையாய்க் கட்டியெறி வார்நரகில். 22

பாச்சி யளந் தெடுத்தும் படிகுறைய ஈவோரைக்
காய்ச்சிச் சதையைக் கழட்டித்தின்னவே கொடுப்பார். 23

வீட்டுத் தலைவர்க்குமுன் மேவிப் புசிப்போரும்
வீட்டுக் கணவன் சொல்லை வெறுத்துத் தட்டி விட்டோரும். 24

வீட்டுக் கணவன் சிற்றை வெளியிற்சொல் லுகின்றோரும்
வீட்டுக் கணவன்கையை மீறித்தட்டி விட்டோரும். 25

அன்னைபிதா சொற்கேட் டருங்கணவன் சொல்லைத்தட்டிப்
பொன்னைப் பொருளைப் போற்றா தழிப்போரும். 26

பின்னொருவன் மேல்நிதமும் பேராசை கொள்வோரும்
வன்னரகி லேமிகுநாள் வாழ்வார் சபையோரே. 27

கொண்டவடி யார்க்குவெருங் கூழ்வார்த்து விட்டுநல
முண்டி பெருக்கத் தின்னு மூடருக்கும் வேதனையே. 28

நன்றி செய்த பேர்க்கு நலகேடு செய்வோரும்
துன்று பொய்க ளெந்நாளுஞ் சொல்லித் திரிவோரும். 29

கண்கண்ட ஐபதனைக் கழறித் திரிவோரும்
பெண் கொண்ட பேர்க்கழிவு பொல்லாங்குச் சொல்வோரும். 30

வாடி வதங்கி வருத்தப் படுவார்கள்
ஊடி யிறை முனிவு முண்டாஞ் சபையோரே. 31

இருபேர்கள் மூச்சு மெதிராய் விழப்படுத்தா
லொருவ ரிருக்க மற்ற வொருவர் குடிபோவார். 32

மடிபிடித்துத் தான்சபையில் மகரதனைக் கேட்போரும்
கடிநாயைப் போல் மானங் கானவுடை கொள்வோரும். 33

மிடியனென்று மாப்பிள்ளையை வெகுண்டு மொழி சொல்வோரும்
வெடிழலக்குக் கையிற்சிக்கி வேதனை களாவாரே. 34

விட்ட பெண்ணைச் சேர்த்து வைக்க மேலாஞ்சக்கங் கொள்வோரும்
இட்டமுடன் பொய் சாட்சி யெழுதுனரும் சொல்லுனரும். 35

படிமீது கள்ளவொலி பண்பாய்க் கொடுப்போரும்
திடனாக ஆகிறத்திற் றீக்கொழுமாட் டப்படுவார். 36

முப்பது முழநீள முனைக் கொழுவைத் தான்காய்ச்சித்
தப்பாமல் வாயில்விடு வார்காண் சபையோரே. 37

ஆயத் துறையிலுற்றே யனியாயஞ் செய்வோரும்
மாயங்கள் சூனியங்கள் வஞ்சனைகள் செய்வோரும். 38

நாயனுக்கு வேறாகி நாக்கு முப்பத் தோர்முழமாய்ப்
பாயநீண்ட டங்கனிழு பட்டுத் திரிவார்கள். 39

கோலம்பல வேசங் கொண்ட கூத்துகளைப் பார்ப்போர்கள்
ஆலநபி தம்பவனி யலங்காரங் காணார்கள். 40

வாய்நாறி தென்றுகூட வைத்தருந்தா மானுடர்கள்
நாயன் விருந்தவர்க்கு நல்காண் சபையோரே. 41

இவ்விடத்தி ராகங்களை யின்பினோடு கேட்டசெவி
அவ்விடத்தி ராகங்கள் கேட்காதே சபையோரே. 42

பாடகம்பின் கொக்கி பலமணியும் பூண்டுதங்க
ளாடவரை யன்றிவேறோ ராடவர்முன் னிற்போரும். 43

வேசியரைப் போற்பலபேற் விழிக்கெதிராய் நிற்போரும்
தூங்கிநா கிற்பாம்பு சுற்றிக்கொள்ள வேதிரிவார். 44

பல்விளக்கி மையெழுதிப் பாவிகளங் காபிர்முன்னே
வில்லினுதல் காட்டிநல்ல மேல்காட்டித் தோள்காட்டி. 45

சொல்லும் விழி காட்டி நிற்குந் தோஷி மடவார்களையே
புல்லுமவர் பாவிகளாய்ப் போவார் சபையோரே. 46

மல்லிகைப்பூ வாசம்மற்று மாதர் மனைக் குள்ளிருந்தே
நல்ல வணிவதல்லால் நபில்பலருந் தான்காண. 47

பல்மணங்கள் பூசுமந்தப் பாவையரு மாகிறத்தில்
அல்லல்படு நாற்றங்களை யணியக் கொடுப்பார்கள். 48

அப்போது சொர்க்கமடவார்களுங்கை கொட்டியிவள்
தப்பான கேடியென்றே சாற்றிச் சிரிப்பார்கள். 49

இலைபார்க்குத் தானுமெடுத் தீயமன மில்லாத
வலமாத ராகிறத்தில் வருத்தப் படுவார்கள். 50

வெளுத்த வெள்ளைக் கஞ்சி விரைப்போடு மேதுயிலை
யிழுத்தரையிற் கட்டி யேகனைத் தொழுதாலும். 51

நாளை மஹ்ஷறிலே நவிலும் புழுதியள்ளிச்
சூழவவர் மேலிடுவார் சுகமார் சபையோரே. 52

மறைக்கு மபத்தைதழுவர் மண் ணுலகிற் பார்கிலஃ
துறைப்பான குற்றங்குறை யொருக்காலும் வாராதே 53

தன்னைப்பெற்ற தாயுந் தன்புருஷ நாயகனும்
பின்னைப்பிள்ளைப் பேறக்குறம் பெண்மருத்த வற்சியுமே. 54

இந்தழுவ ரன்றியப மெவரேனுங் கண்டாக்கால்
என்னுமிறை முனிவை யிடுவான் சபையோரே. 55

வேதவிலக் கானவினை மேதினியிற் செய்தோரை
யோதுகின்ற ஆகிறத்தி லூரியா னுடனும் விட்டே. 56

காதுபுரி நாகங்களைக் கடிக்கவிடு வாரவைகள்
வேதனையாக் கொத்தித் தூங்கும் விண்ணோர் சபையினிலே. 57

நாறி யெழும்பும் பெரு நாற்றமப்போ நாயனிடம்
ஊறில் மலக்குகள் தான் வாய் திறந்து கேட்பார்கள். 58

கூறுமிந்த நாற்றமென்ன குதாயேயென் றப்பொழுது
தேற மிறைவனந்தத் தேவாதி கட்குரைப்பான். 59

எரிநரகி லேயவரை யிழுத்தெரிந்து போடுமென்றே
அரிய மலக்குகளு மப்படி யிழுத்தெறிவார். 60

ஆனால் பிறந்தோரை யறுபான் முழுமாக்கி
வானா லுருகவெரி வன்னரகிற் றள்வரவர். 61

ஈனச் சினக்கள் செய்தே யிறைவேதத் துள்ளஹத்தை
தானுந் தொலைத்துத் தௌபா தாரணியிற் செய்யாமல். 62

ஆறறிவா ரென்றே யடக்கிவைத் திறந்தோர்கள்
சீறு நரகிலுற்றத் திரிவார் சபையோரே. 63

களவுதனிற் பெற்றபிள்ளை காசினியி லேயிருந்தாற்
பழுதுறுமென் றக்கருமைப் பாரிற்றட்டவே மருந்து 64

வழுவாதியற்றப பொருள் வாங்கிமருந் தீந்தோரும்
களவிற் பொருந்துமிரு கள்ளரோடு மூவருமே. 65

தங்கள் சதையைத் தின்னத் தழலெடுத்துத் தான்வகிர்ந்து
மங்களவா னோரவர்கள் வாயிற் கொடுப்பாரே. 66

இன்னஞ் சிலபேர்க ளீரல் தலைத்துனைத்து
வன்னிநா கத்தில் வைப்பரவ ராரெனிலோ. 67

தன்னு யகர்பசியாய்த் தானிருக்கத் தாய் மனைபோய்
எந்நாளு முன்வரு மேந்திழை சபையோரே. 68

சிறுமீனைக் கோத்தெறிந்து தின்னநற் கறியெனவே
பருமீனைத் தூண்டிவிட்டு பையப் பிடிப்போரும். 69

பரியகிடாய் சேவல்களைப் பந்தயமாய்ப் போரிடுவோர்
வருவார்க ளாகிறத்தில் மறுவேஷ மாய்நரகில். 70

தன்வீட்டிற் றீபம்விட்டுத் தன் பிரான் வீடிருளாய்த்
தென்போடு போடுமவர் தீச்சுமப்பாரே நரகில். 71

தனமிருந்து பள்ளிங்கெண்ணெய் தயவா யளிக்காதார்
தனதுமுகம் நாய்முகமாய்த் தலைபுழுத்தே தான்றிரிவார். 72

பள்ளிவா சற்குப் பரிவாக எண்ணெயிட்டோர்
தெள்ளு மறிவுகளைத் தீர்க்கமாய்க் கேட்டறிந்தோர். 73

வழுவேது மில்லாத வானஹூறுல் ஈன்களிலே
எழுநூறு பேர்க ளெனக்குனக்கென் றேயழைக்க. 74

அறிவுவந்து கேட்செவிக் காளந்தமேபெருக
முறைமுறைதான ருகோசை முழக்கச் சொர்க்கம் போந்திடுவார். 75

அறிவுகற்க வேண்டி யடிகளெட்டி வைத்தோர்கள்
நெறியுள்ள ஹூறுல்ஈன்கள் நேசம் பெருவார்கள். 76

அறிவை யறியார்கட் ககமியத்தி லேயறிவு
திறனுகச் சொல்லுகிறேன் தேர்ந்த சபையோரே. 77

அஞ்சொகுத் துந்தொழுவோ ரன்றுடு செய்பிழைபோம்
வஞ்சகமவைத் தேதொழுதால் வல்லோன் கபூலாக்கான். 78

தினமுமறந் தாதியினைத் தேடா திருப்போர்க்குக்
கனதிலஃ னத்துமவன் கடுமுனிவு மேகொடுப்பான். 79

தனங்தேடி யுண்ணுமற் றானியினி லேபுதைத்தோர்
சினங்கொண்டு சிறுமந்தத் தீநாகி லேவிழுவார். 80

அந்தரத்தி லேபலன்க ளாகுமெனக் கட்டிவைத்தோர்
அந்தரத்தில் நின்றுநர கார்நெருப்பைக் கைக்கொளுவார். 81

பந்தியி லெளியோர்க்குப் பலவரிசை யீவோரும்
உந்து மொருவர்பிழை யுவப்பாய்ப் பொறுப்போரும். 82

நெடிதாக ஆகிறத்தில் நீடுழி வாழ்ந்திருக்க
வடிவாகச் செய்திடுவான் வல்லோன் சபையோரே. 83

தொழுகையுந் தொழுகைக்கு முன் சொன்ன கலிமாப்பலனு முறைத்தல்.

தரு-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

தனத்ததத்தாங் தாங்தனதாங் தங்தனதாத்—தனனங்
தனத்தனதா தனதங்தன தனத்ததன தாத்தம்.

ஸலாத்தை விட்டோர் நாற்பது பேர் தம்பசிதீர்ப்—பதிலும்
ஸலாத்துடையோ ரொருவர்பசி தனித்திடு லேற்றம்
ஸலாத்தைவிட்டோர்களுக்குப் பெண்ணைத்தாலிகட்டி—வதுதான்
தாரணியற் பாதகமாம் சாற்றுஞ் சபையோரே. 1

ஸலாத்தைவிட்டோர் களைமுறைமை சாற்றுவது—போலே
சங்கைகெட்ட தெங்குமிலைத் தகுந்தசபை யோரே
ஸலாத்தைவிட்டோன் சொக்குகின்ற சகலகள—ரியலுஞ்
சாதமன்ன முண்பதுங் தகாதுசபையோரே. 2

ஸலாத்தைவிட்டோன் கஸ்தூரி ஸக்காத்துற்—றதையுஞ்
சங்கையிறை கபுலாக்கான் பொங்குசபையோரே
ஸலாத்தைவிட்டோ னிறந்திடிலுங் தான்போக—விலக்கு
ஜனசாவைக் குளிப்பாட்டவுங் தகாதுசபையோரே. 3

ஸலாத்தைவிட்டோ னுடனிருந்து சாதம்புசித்—தாலும்
தகுதிகெடு மகுஷறிலே மிகுதிசபையோரே
ஸலாத்தையுல கவர்களுக்குத் தான்பயந்து—செய்வோர்
சங்கைநபி நாயகருக்குச் சதிசெய்தவ ராவார். 4

அன்றாடு செய்தபிழை யைந்தொகுத்துந்—தொழு டாய்
அன்றாடு தீர்ந்துவிடு மரியவுண்மை தானே
நன்றாக வைந்தொகுத்து நாடித்தொழு—கையிலோர்
நாயன் சமு கத்தினராம் நவிலுஞ் சபையோரே. 2

கலிமாவுந் தொழுகையுமே கபூலாகு—மானால்
மெலிவான கபுறுதனில் மிகுங்கேள்வி யிலையே
கலிமாவிற் பிழைவருகிற் கத்தனவன்—றொழுகை
பலியாமற் போகுமிதைப் பாருஞ் சபையோரே. 6

கலிமாவில் லாதவருக்குக் கழறுஞ்ஸலா—மில்லை
கனத்தழுழுக் கதுவுந்துசி கரத்தைக் கொடுக்காது
கலிமாவைத் துனியாவிற் கானநமக்—களித்த
கத்தன்புறுக் கானதிலே கண்டேன் சபையோரே. 7

கலிமாவில் லாதவர்க ளிருக்குமிடந்—தானே
கடியவிருள் நரகமது காணுஞ்சபையோரே
எலிபாம்பு வாயதனி லெம்பட்டுக்கொண்—டாமற்போல்
சலியாமல் மலக்குகள தாபுசெய்வார் பெரிதே. 8

உருவாக்கிக் கலிமாவ யுடலாக்கி—வணங்கிற்
பரிவாக அமல்களெல்லாம் பத்துநூறா கிடுமே
பெரிதாக வேதங்களிற் பேசிவரு—வதைநான்
பெட்பாகக் கண்டனன்சீர் பேணுஞ்சபையோரே. 9

கலிமாவை மூச்சுடனே கலந்தேற்றி—வணங்கிற்
பலவாகக் கெடுதிகளும் பாரில டராதே
கலிமாவை யோதுமந்தக் கனவரிசை—யாலே
கத்தனன்மை கொடுத்திடுவான் காணுஞ்சபையோரே. 10

இறையவன்றா னுவப்பாக விருக்குமந்தக்—கலிமாத்
தரைமீதி லொருவருள்ளந் தான்படிய வோதிற்
குறிகேடாம் பாவமெல்லாங் கூறும்பனி—கதிர்முன
மறைவாகிப் போகுமந்த வாறுசபையோரே. 11

ஓயாம லோடிநிற்கு மூடன்மீதின்—மூச்சை
மாயாமல் வசக்கிலப்போ மவுத்துவரு கிலுந்தான்
பேயாக வனுதினமும் பிடித்ததனில்—நடந்து
வாயாலே சொல்லாமல் மனத்ததினா லோதில் 12

ஆதியொரு பெரும் பொருளோ னதொரு—மவுத்தை
வேதனையில் லாமற்பிடி விரையவென்றே விடுவான்
சோதியவ னுயிர்தனையே சுகமாக—வெடுத்துப்
பாதிமதி போலெனது பரிவான அறுஷில். 13

அழகாகக் கூட்டிவந்திங் கமரர்களே—முன்னில்
ஒளியான துயில்சூட்டி யொவ்வொரு விதமாய்
எழுநூறு மணிமாலை யிலங்கவர்—கிட்டுத்
தழுவமின்னார் பரிமளங்கள் தனையெரியு மென்பான். 14

காந்தியிலே தினந்தோறுங் கலந்தகலி—மாவை
ஏந்துபுவி தனிலுள்ளவ ரெந்நாளுந் தானே
ஆழ்ந்திருந்தா கிலுமுழிப்பா யரியவிமைப்—பவன்மேல்
வாழ்ந்துவிடு மூச்சதெல்லாம் வரிசைகொள்பீ சபிலாம். 15

புவிமீதி லிருவருஞ்செய்த பிழைகளெல்லாம்—பொறுத்துக்
கபுலாகும் நாளைக்கஃ பாவிற்புகும் பலனே
தவியாமல் நினைத்தபொருள் கைகூடி—வந்து
கவியுமொருக் காலுந்தப்பி டாதுநிச மாமே. 16

அண்டர்களும் வானர்களு மறியாத—பொருளைக்
கண்டுமதி லேகலிமாக் கனத்திலொட்டி யடைக்க
மண்டலத்தில் வெளியாக்க மருந்துநல்ல—மருந்து
தெண்டித்துத்தான் பெரியர்களைத் தேடிப்படித்திடுங்கள்.

கூறுனி மார்களுக்குக் கொடுக்கநல்ல—பரிசங்
கூறுனி மார்களுக்குக் கொடுக்கநல்ல கூறை
கூறுனி மார்களுக்குக் கொண்டாடு—மாலை
கூறுனி மார்களுடன் கூடுவது திடனே. 18

மூச்சதினால் வணங்குமவர் முறையாவர்—வாக்கு
வாசமுத்து மாலையென்று மடவார்கள் முடிப்பார்
கூச்சமற்ற பெண்ணூறு கோதையரு—மற்றும்
பேச்சுவென்றி சொர்க்கமெட்டும் பெறுவர் சபையோரே. 19

கோச்சகம்.

தப்பாமலைந்துந் தவறவிடா தேயறிந்தால்
மெய்ப்பான நல்லறுஷும் விளங்குங்குறு ஸுங்கலமுந்
துப்பாறு மக்கம்பையித் துல்மஹாமூ ரூனதுவும்
ஒப்பா யறிந்துசுவ னூர்புகுந்து வாழ்வாரே. 1

அல்ஹம் தெனமொழியும் மைந்தெழுத்தை யாக்கியெட்டாய்
வல்லான் றனைவணங்கி வழுத்து மவை முன்னிருத்தி
நல்ல நிலையறிந்து நாட்டமஃ தொன்றனே
யெல்லை பிரிந்துவிடா திறையவனுந் தள்ளானே. 2

சொல்லுஞ்சய லுங்கருத்துந் தோன்றவொன்றால் ஸுஜூது செய்தா
லல்லும்பக லும்மலைபோ லரியநன்மை யுண்டாகி
யெல்லவர்க்கு மேலான ஈடேற்ற மாவரென
நல்லசபை யோர்கள் முன்னே நவின்றாள் குறமகளே. 3

கலிமாப் பலிதமானல் காஸியத்திஃதெனல்.

தரு-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

தானதன தாத்தனதாந் தானதந்தா—தந்தாத்
தானதனந் தத்ததந்தத் தானந்தந்தன தான.

தாரணியி னுற்பதுபேர் தானுநல்லோ—ரென்றாற்
சிரணியும் சொர்க்கமின்னைச் சேவர் திடனக
வாரணியுங் கொங்கையைமேல் வைத்துப்படி—படியாய்ப்
பாரமடவார்கள் வந்து வந்தியதாய் நிற்பார். 1

வாங்குசொல்ல முன்னெழுந்து வணங்கிடமுந்—திடினும்
வாரிஸக்காத் தெடுத்தெடுத்து வழங்கிடினும் நோன்பு
தீங்ககலப் பிடித்திடினும் சீர்ஹஜ்ஜு—செய்திடினு
மோங்குநாற்ப தடிமைகொண்டேயுரிமைவிட்டு விடினும். 2

அகிலமெங்கும் புகழ்பரவு மம்பெயர்பெற்—றிடினும்
அழகுபள்ளி வாசல் நாற்ப தமைத்திடினு மீயா
பகிலன் சொர்க்கம் புகுந்திடவுமாட்டா—னொருபோதும்
பார்த்துக்கொள்வீர் மெய்மைகளைப்பகருஞ்சபையோரே. 3

வேறு.

பகிலருக்குச் சுவர்க்கமில்லை யெனவே—மிகு
பலன்செய்புறக் காணதிலே கண்டேன்
சகலகலை கற்றிடினும் புவியில்—நல்ல
தருமம்ஸக்காத் தெடுத்தளியார் தமக்கு. 1

ஜெகதலத்தில் நன்மையிலை யெனவே—வேதந்
தேர்ந்தவர்சொன் னார்கள்சபை யோரே
பகிலருக்குக் கற்பித்தன னாதி—முக
வன்னியெரி நரகபதி தானே. 2

சிதேவி யானவர்கட் கிமோன்—நன்றாய்ச்
சேர்ந்துநிற்குக் கபுறுதனிற் கூட
மூதேவி யானவர்கட்கிமோன்—நாட்கள்
மூன்றினுக்கு முன்பறந்து போமே. 3

ஆதியினா ரனவொளி தனையே—கண்ட
அவர்சடலங் கபுறிலழி யாதே
நீதியது சேருமறை மீது—நன்றாய்
நிகழ்த்துகலி மாவறியா ருடலம். 4

ஆறாயி ரந்தவஞ்செய் தாலுங்—அஃ
தழிந்துவிடு நிச்சயம தாகக்
கூறாக மூன்றுவகை யறிந்தே—யதைக்
கொண்டு வந்தோர்க் குடலழிந்தி டாதே. 5

வீறாக விடுங்கபனைக் கழட்டி—நல்ல
விண்ணவர்கள் கூட்டிக்கொண்டு போவார்
பேறாக நம்முடனே யிருக்கு—மந்தப்
பீரிடத்திற் கேட்டறிய வேண்டும். 6

உள்ளபடி மூன்றிதனை யறிந்தா—லவ
ருடல்தனிலே புழுக்கள் பிடியாதே
மெள்ளவந்து முன்கறுநக் கீறு—கபுர்
மீதுதட்டிக்கேள்விகளுங் கேளார். 7

பன்னுகின்ற வெள்ளளவு சடலம்—நாறாப்
பண்புதனையுஞ் செய்துகொள்ள வேண்டும்
பொன்னனைய விச்சடலம் நாறிப்—பூவிற்
புழுப்பிடித்துப் போகமற் பேணி. 8

மன்னரிஸூ ரூயில்வரு முன்னே—நல்ல
வாகுமுரீ தாகியதின் வணக்கம்
இந்நிலத்தி லடங்குமுன்னே வகைகள்—மூன்று
மேயறி வேண்டுஞ்சபை யோரே. 9

தனியன்.

முன்னே கலிமாவை யுருவாக்கி மூச்சையுமே யறிந்து கன்னுசை
வெல்வீரேற் சடலமொருக் காலுமழியாது கபுறிற் ருனே.

கொச்சகம்.

கன்னுசை வென்று கத்தாதனைத் தொழுதா
லெந்நாளுஞ் சாகா திருப்பார் சபையோரே
பொன்னும் பதியிலுள பூவையர்கள் தானிறங்கி
மின்னுரு நன்மஹூஷர் வேளைகொண்டு போவாரே. 1

வணக்கத்தி லெட்டாமல் வந்து தட்டி விட்டோரே
யிணக்கத்தி லெட்டாம லெடுத்தெறிவாரே நரகில்
கணக்கில் மிகக்கேடன் கடியஇபு லீஸுடனே
பிணக்கமிட்ட பேர்கபுறிற் பிசகார்கள் நன்மையன்றே. 2

வெண்பா.

வணக்கந் தவறுமோ வன்கலிமா முன்னிற்
குணக்குமது வந்திடுமோ கூர்வாச—விணக்க
மணக்குகின்ற சொர்க்கநகர் மட்டுமே வான்மடவார்
பிணக்கமற வீற்றிருப்பார் பின். 1

கலிமாப் பயிரானுற் காயன்றி யேபழமாம்
யுலியா மவுத்தலீது பூளையாம்—ஒலிமார்கள்
கூட்டத்தி லாக்குமெனக் கோதையவள் நெஞ்சம்
வாட்டமறச் சொன்னுள் மகிழ்ந்து. 2

தௌஹீ தறிவுகளுரைத்தல்.

தானதன தானதன தனந்ததன தாந்தந்
தந்தனனு தத்ததன தனதனன தனந்தா.

நாலுவகை யாலிறையை நயந்தறிய வேண்டும்
நல்லஷரீ அத்துவழி நடபடிக ளறிந்தே
மேலுந்தரீக் கத்துவழி விளப்பமதையறிந்தே
விள்ளுமதி னிலையறிந்து மிகவணங்க வேண்டும். 1

அலைவறுஹக்கி கத்கதி னுரும்வழி யறிந்தே
யதினுடைய நிலைநெறியு மறிந்துதொழ வேண்டும்
விலகரிய மஹறிபத்தில் வீற்றிருக்க வேண்டும்
மெஞ்ஞான வழியதனை மிகத்தெரிய வேண்டும். 2

எழுஸிபத்தை யொன்று செய்தே பார்க்குமவர் தன்னுள்
ளிருமணிமந் திரவுருவா யிலங்கிநிற்குந் தானே
எழுஸிபத்தை யின்னதின்ன தெனவிரித்துப் பார்த்தே
யிரண்டிலொன்றை யடைத்துயிரச மூன்றெழுக்தைத்தானே

வழியிஃதென் றில்லெழுத்தில் வைத்துப்பார்க்கு மவருள்
மணியொளியை யொத்திரவில் மறைவன்றியே யிறையை
வழியினொடு கண்டிடலா மண்பதிவிட் டிடினும்
வனிநரகுங் காண்பதில்லை வானுலகிற் றானே. 4

உருமைக்குறு னெழுத்தைபார்க்கி னுண்டுமதி லிருபத்
தொன்பதெழுத் தாலுமென்சா னுடலுருவாகினதே
யிருமையிலிப் பேறுடைய வெழுத்தையறியாதா
ரெரியில்விழுஞ் செயலுடையா ரினுங்கொடிய ராவார். 5

இருபத்தொன்ப தெழுத்துநிற்கு மிடமறிந்து தொழுதா
லிருளுற்றிடுங் கபுறிற்சட மென்றுவழி யாதே
இருபத்தொன்ப தெழுத்தையறி யாதவர்கள் தானும்
இமாமத்துச்செய் தாலு நன்மையில்லைசபை யோரே. 6

உடலின் வகை தனையினிநீ ருவந்துசொலக் கேளும்
உண்மையனு தினமுனெஞ்சி லுள்ளசபை யோரே
அடல்செறிநாற் கோணம்ஷரீ அத்துடைய நிலைதான்
அழகுபெறும் பூமிமண லான நிலை யாமே. 7

மடல்மெறிந்த விருகோணம் வழுத்திடிலோ வந்த
வாசமுள்ள தண்ணீர் தரீக் கத்துநிலை தானே
துடிசெறியு முக்கோணஞ் சூறைகொள்ளுங் காற்றுச்
சொல்லும் ஹக்கீக் கத்ததனைத் தொடர்ந்த நிலையாமே. 8

மெய்ப்பான அறுஷு தனில் விளங்கிய நெருப்பு
வேணுமந்த மஹறிபத்து வியன்கொளு நிலைக்கே
ஒப்பறுமா காசமஃதொன்றினு மடங்கா [ஞானம்.
துரைக்குமிந்த வைந்து மிகு பேர்மை கொள்மெய்ஞ்

அஞ்செழுத்து மஞ்சொகுத் மறியுமரண்டா யத்தும்
பிஞ்செழுத்து மீம்புதையற் பெருங்குருவா மெழுத்தும்
நெஞ்சிலுருப் படுத்தில் நல்ல நெறிபுதுமை யறிவார்
அஞ்சிலொன் று சாற்குரு வாயங்கொளி யாகும். 10

முன்சொன்னமீன் சொர்க்கமுஹும் மதுவடிவுகாட்டு [தாம்
மொழிமைந்து மூன்றுமொத்தால் முன்னோன் ஹக்கீக்கத்
பன்செய்தபேர்க் கொளிவுமுற்றும் பார்வைதனில் வெளியாம்
பார்முஷாகி தாவில்முஹம் மதரொளிவு விளங்கும். 11

வாவெனுமவ் வெழுத்துமண லாமதில்நீர் காற்றும்
வாவெனுமவ் வெழுத்ததுதீ வழுத்தந்தா மிருளாம்
ஆவெனுஞ்சொல் லாலிவைக ளைந்துமுண்டா னதுவே
அருளுடைய சபையவரே யரைவனின்னங் கேளும். 12

வேயுமணற் பொன்னிறம் விலங்கும்பல் லுக்குத்தி
வீடதுதா னுகுங்கொம்பு மெவ்வாய்ஜிபு ரீலே
பாயுபுனல் நிறம்பளிங்கு வீடுகரு வீரல்
பகர்கொம்புகண் ணுகுநிலை பார்த்திபர்மீக் காயீல், 13

வாயுநிறம் பச்சைவளர் வீடுநுரை யீரல்
வருத்துமக்காம் கொம்பதற்கு மன்னரிஸ்ரா ருயீல்
தேயுவெனு நெருப்புநிறஞ் சிகப்புவீடு பித்தாம்
செப்புகொம்பு காதுநிலை சிறந்தஇஸ்ரா ருயீல். 14

சொன்னவன லதற்குவீடு சுகதாமரை யாகும்
தூயவதின் கொம்புசென்னி தலங்கிடுமூ ளையிலே
அன்னதுநா ருயிலங்கி யாவதெல்லா மறியும்
அழகுடனே யென்றறிய வரிலவையுரைத் தனளே. 15

அஞ்சுவகை கொண்டுபக ரஞ்சையும் படைத்தான்
அஞ்சுவித மஞ்செழுத்து மகாவிறை தானே
அஞ்சுநன்று யறிந்து தொழு தான துஆச் செய்தே
அஞ்சுமொரு கொம்பிலிலங் கினதறிய வேண்டும். 16

ஆயிரம்பேர் நாயனுக்குண்ட தன்விபர மறியார்
ஆயிரமாண் டாய்வணங்கி னுலுங்கதி செய்தார்
ஆயிரந்த வஞ்செய்யினு மனுவுங்கதி காணார்
ஆயுமறை யாயத்திற்கண் டனளென்றன ளணங்கே. 17

அன்னைபிதா பங்கும் அல்லா வவனுடைய பங்கும்
அஹ்மதுற ஸூலுடைய பங்குமுடல் மீதில்
இன்னதென வறிந்துகொள்ளா திருக்குமவர் நாளை
யென்னவிதம் பாடுபடு குவரோயானு மறியேன். 18

சொன்னவிஃ தறிந்தவர்கள் தூயவொளி யாவார்
தூயிறைமுன் குன்குவென்ற சொல்லதினு லெவையுங்
தன்னொளியி னூர்படைத்த கருதியின்சந் தேகஞ்
சாற்றுகிறேன் சேளுமினித் தானேசபை யோரே. 19

நுக்கத்ததுவோ அலிபதுவோ முந்தினது அல்லால்
நுவலுகின்ற ஆதியோவ னுதியோமுந் தினது
நுக்கத்ததற்கு முன்னமேதா னுவலெழுத்து முண்டோ
நூருகிய ஹறக்கோமுஹறம் மதரோதான்முந் தினது 20

பார்வையதோ கேள்வியதோ பகாமுந்தி னதுதான்
பண்புடைய பேச்சோ மூச்சோ முந்தினது தானே
ஏர்கினைப்போ முந்தினதில் வியலையறிந் தோரே
இயம்புமறைக் கடலென்னலா மேதில்சபை யோரே. 21

சோதியதோ நால்வேதமோ சுடரதுவோ விருளோ
சொல்லுயிர வோபகலோ தொகுத்திடமுந் தியது
ஆதமோ ஹவ்வாமயிலோ முந்தினதங் கவர்கள்
அமைப்புக்குமுன் ஆதங்களை யாக்கினது முண்டோ. 22

கருத்தரிக்க முதலிற்காய நின்றதெந்த விடமோ
கவலுமுடற் றறிக்கமுத லுயிர் நின்றதெவ் விடமோ
மருட்டரிக்க முதலின் மாயை மன்னினதெவ் விடமோ
வழுத்துமுஃ தறிந்தோர்குரு வாகுஞ்சபை யோரே. 23

அல்லாஹ்வின் கோலமென்ன அலனவ்வலி லிருந்த
அரியகோல மென்ன அலனவ்வலி லிருந்த
அல்லாஹ்வின் சித்தமென்ன வவன்பொருத்த மென்ன
அறிந்திவை சொன் னோர்கள்குரு பவாகுஞ்சபை யோரே. 24

ஆணோ பெண்ணோ வருபியோசு ரூபியோதா னவனும்
அறைந்திடுகா ணஃதோவில்லோ வானதெந்த விதமோ
பூணேபொரு ளோவிதனைப் பொற்பொடுமு ரைத்தாற்
புந்தியுல குருவென்னலாம் புகலுஞ்சபை யோரே. 25

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்

இன்னவை யறிந்த பேர்க ளியம்புதாய் தானே ராகும்
இன்னவை யறிந்தால் யாரு மெழிலுறு மொலிக ளாவார்
இன்னவை யறிந்தோர் மேனி யிலங்கிடுந் தங்கம் போலே
இன்னவை யறிந்தோர் தம்மை மண்தின்னு தென்றுந் தானே. 1

இந்தவா சகத்தை யங்ஙனிருந்தவ ரெல்லாங் கேட்கச்
சிந்தையின் மகிழ்வுகூர்ந்து சேழியை தன்னை மெச்சி
யெந்தவா றிவளுக் கின்ன விருங்கல்வி தெரிந்ததென்றே
புந்திசெய் போதி லின்னும் பூவைதா னிரைப்ப தானுள். 2

மன்னிய சபையி னோரே மக்கமூர்க் குறைஷி யோரே
பொன்னக ருறுதி பெற்ற புகழுடையவரே கேளும்
மின்னுமோ ராசனுக்கு விளங்குநீர்க் குளமொன் றுண்டும்
பன்னுமக் குளத்தி னுன்கு படியு முன் டங்கோர் மானுள். 3

அடியிலாக் குடத்தைக் கொண்டே யறலினுக் குற்று ளங்கே
கடியுறு வில்லு நாணுங் கையுமிலா வேடன் வந்தே
துடிபெறு மானைக் கண்டு துரத்திக்கொண் டேக மானு
மடியிலாக் குடத்துட் புக்க மானமென் றொளித்த தன்றே. 4

மானுக்குத் தாவா தம்மான் வயிற்றுறு குட்டிக் கெய்தே
மானின்குட் டியைநாற் சந்தாய் வாட்டியே பின்ன ரத்தி
லானதோர் தோலி னுலே யந்தரம் பூமிமூடித்
தானொரு சந்தி னுலே தனக்குண விருந்து மாக்கி. 5

மற்றொரு சந்தால் நான்கு மாதவ மிகுதி செய்தே
மற்றொரு சந்தி னுலே மலக்குக்கும் விருந்து மாக்கிச்
சிற்றொரு சந்து வள்ளல் திருமணக் காட்சி னுக்கு
வைத்திருக் கிதுதா னம்மை மனத்துறும் சபையி னோரே. 6

இவ்விதமடவாள் சொன்ன இல்மினைக் கேட்டெல் லோருந்
திவ்விய மகிழ்ச்சி பூண்டார் திருவிற ஸூலென் னுட்குப்
பவ்வநேர் வரிசை நல்கிப் பாவையே யின்னுநீதா
னெவ்வறக் கற்ற கல்வியுண்டெனி லுரைத்தி யென்றார். 7

நந்நபி சொற்கெட் டந்த நாரியு மகிழ்ந்து மேன்மை
துன்னிய விறஸூ லுல்லா தூயமல ரடியைப் போற்றி
முன்னிய சபையோர் நோக்கி முத்தியீர் கேளீ ரின்னும்
பன்னுமோர் கல்வியென்னப் பகர்திடலாயி னுளே. 8

முன்னொரு கொழுந்தை நுள்ளி முறைப்படி நாட்ட*வாது
தன்னிலே முளைத்தோ ராறு தன் கொழுந் திட்டதத்திற்
பொன்னிறப் பூக்கள் ரண்டு பூத்தரும் புகளா யுற்றுப்
பின்னவை காய்க ளாகப் பிறங்கின தருமை யாக. 9

காயஃ திரண்டி லொன்று கனியதா மொன்று காயாம்
வாயினாற் கனியைத் தின்றோர் வல்லவன் ஹலறத் தாவார்
நோயிலாப் புகழுண் டாவார் நுவலுதற் கொப்பி லாதாற்
காயதி னிறமே தென்றால் ஹபீபுதம் நிறமா மென்றாள். 10

பத்துடனன்கு இல்மின் பண்பறுந் திடுமோர் ஷெய்கு
முத்தமி யான பெண்ணே டுவந்திடு முழுக்கை நீக்கிச்
சுத்தியாய்த் தொழுவென் றெண்ணிச் சுபகில்நீர்க்கரைசெல்போதே
ரத்திரி துரத்த வன்னு ரோடியோர் மரத்திலானார். 11

மரத்திலே நின்று தானே வழுத்துமம் முழுக்கைத் தீர்த்துக்
கரத்திலே பணறைத் தொட்டக் கரங்களோ டவருந் தூய்தர்
யுரத்தொடுந் தொழுதா ரந்த யுண்மையை யறிந்த பேர்கள்
கரத்தினிற் புனலீந்தோர்க்குத்தோழர்தா னென்றுசொன்னாள். 12

ஊணில்லை யுரக்க மில்லை யுடையில்லை நடையுமில்லைச்
சாணில்லைச் சாவு மில்லை சரியிணை தானு மில்லை
யேணில்லைக் கோணு மில்லை யிரவில்லைப் பகலு மில்லைத்
தானுவா மிதை யறிந்தோர் தரையினிற் பெரியோ ரென்றாள். 13

பார்வையுங் கேள்வி தானும் பகர்ந்திடும் பேச்சு மூச்சு
மோர்மையு மறிவுங் கல்வி யுரைத்திடும் ஹயாத்திவ் வேழுஞ்
சீர்மையி னம்மிற் சேர்ந்த சிற்றினைத் தெரிந்த பேர்கள்
பார்மிசை குருவென் றேகை பற்றலா மென்றுஞ் சொன்னாள். 14

கலியுறு கலிமா ரண்டுங் கல்பினி லுருவ தானல்
மெலிவுறு முழுக்கை நீக்கும் விதங்களைத் தெரிவதாகும்
பலிதமாந் தொழுகை தானும் பகர்கலி மாவைத் தேறார்
ஒலியுறு பாவ வாரி யுள்ளமிழ் பவரா மென்றாள். 15

---

*அது என்னும் பதம் தொடர்ச்சியா விசையைப் பற்றி, ஆது என்று வந்ததெனக் காண்க.

அகமியக் தெரிந்த பேர்க ளனுதின மில்லை யாகிற்
ஜெகமுழு மையு மனாதி செப்புதன் கோமத் தீயான்
மிகவெரிந் திடவே செய்வான் விலம்புமீ தூன்மை யென்னத்
தகுதியின் சபையோர்க் கெல்லாஞ் சாற்றினாள் தைய லன்றே. 16

ஆதமும் ஹவ்வா தாமு மமைத்திடு நாயன் சொன்ன
நீதியைத் தவறிப் பூவி னெடுந்தின நின்ற பாவந்
தீதறத் திட்டவந்தத் திருமொழி கலிமாத் தன்னை
யேதற வறிய வென்றா லியம்பொலி களின் பாற் போந்தே. 17

அடிபணிந் தவர்களேவு மரியசீர் கிறுமத் தெல்லாம்
வடிவொடுஞ் செய்யி லன்னர் வாவில் மனத்தைப் பூட்டிப்
பிடியெனத் வருவா ராகிற் பெரின் பங் கண்ணிற் காணும்
முடிவிது போலில் லென்ன மொழிந்தினுஞ் சொல்வ தானாள். 18

கையது பிடித்த செய்கைக் கனவிலு மறக்கொணாது
வெய்கொண்டு பார்க்க ஞானம் விளங்குமே மெய்ய தாகப்
பொய்யென்ற பேர்கள் தானும் பொற்பதி புகுதா ரென்னத்
துய்யசீர் மடவாள் சொன்னாள் சூழ்ந்திடுஞ் சபையோர்க் கன்றே. 19

இந்நிலை யறிந்த பேர்கட் கிரவில்லைப் பகலு மில்லைப்
பொன்னிலைச் சுவர்க்கந் தன்னிற் புகுதுவார் திடனா மென்ன
மன்னிய விதனை யுண்மை வைத்தவர் வாழ்வார் நாளை
யென்னவே சபையோர்க் கெல்லா மியம்பினள் குறமா தன்றே. 20

பூவினில் வாசம் போலும் பொருந்தியோர் பொருளா யுண்மை
நாவினி லுரையைப் போலு நாடினோர்க் கொன்றா யெங்கும்
மேவிய பொருளை யாரும் விண்ணிலே யென்று சொன்னாற்
றாவியே யெரியும் வன்னி தனக்கிரை யாவ ரென்றாள். 21

ஆதிநம் மிடத்தில் லென்பா ரறிந்திடா ரறிவில் லாதா
ரோதினோர் தாமுஞ் சொல்லா ருரைமென் றாற் கோபஞ் செய்வா
ராதிதா னுரைந்த வாரை யறிந்துதான் வணங்கு வோர்க்கு
வேதனை யின்றிச் சொர்க்க மேன்பதி கிடைக்குந் தானே. 22

இன்னதா மிடமென் றோர்ந்தே யிஃதறி யாத மாந்தர்
அன்னிய ராகி நாளை யாதின் சமூகந் தன்னில்
வன்னியி னராக வெயில் வாழுவார் வாழு நாளில்
மின்னிய லீமா னற்று விழுமவர் கூட்டத் தாவார். 23

அஞ்செனும் வன்ன மொன்று யதிலொரு வடிவு தன்னை
நெஞ்சினி லஞ்சும் போலே நிறுத்தியே வணங்கார் நாளைக்
கெஞ்சியே யழுது வாடிக் கீழ்நர காள்வ ரென்ன
மஞ்சணி குழலி னாளும் வழுத்தினாள் சபையோர்க் கன்றே. 24

அழிவிலாப் பொருளைக் கொண்டு மவனரு ளமானங் கொண்டும்
வழியோடும் நினைப்பை மூச்சில் மன்னிடச் செய்து நின்றார்
எழிலுரு சுவர்க்க மெட்டும் மின்பமாய்ப் பெறுவ ரென்ன
விழிவறு சபையோரின்ப மெய்திடச் சொல்லி னாளே. 25

நாலுமாப் புலிக ளுள்ள நடுவனக் காட்டி லேதான்
நாலையு மடக்கி யாள்வோர் நாயன் றலறத் தாவார்
நாலையுஞ் சிதற விட்டோர் நரகினுக் கிரைய மென்று
நாலையுந் தெரிந்த மாது நவில்சபை யோர்க்குச் சொன்னாள். 26

* இவ்வித இல்ம னேக மியப்பிய மடவா ளந்தத்
திவ்விய சபையோர் பார்த்திஸ் திரிகளைப் புணருங் கல்வி
பவ்வனே ருளதி யானும் பகரும்பெண் ணதனால் நாணி
யவ்வியல் தவிர மற்று மறைகுவன் கேளீ ரென்றாள். 27

தனக்கொரு களஞ்சிப் பொன்னைக் கடன் கொடுத்தவர்தான் பின்னர்
வணக்கமாய் வாங்கி னோர்பால் வந்திருந்த ததனை யொட்டி
பிணக்கறப் புசிப்பா ராகிற் பேசுமக் கடனுக் காக
வுணபடும் பலிசை யென்ன வும்பர்க ளாகி றத்தில். 28

மலிவுறு மெரியின் மீது மாபெறுங் கொழுவைக் காய்ச்சி
யெலியினச் சர்ப்ப முண்ணு மிணக்கம்போ லவர்கள் வாயி
லொலியொடு முண்ண வூட்டி யூட்டியே நிற்பா ரந்த
மெலிவுறும் வருத்தம் யாரும் விள்ளொணா தெனமான் சொன்னாள். 29

அகாரமு மதனி னோடு மறைந்திடும் இகார முஞ்சேர்
வகாரமு மறந்தே யுள்ளி லவாவொடு மோதி யோதிச்
சிகாரமா மெழித்தி னூடே தெரிந்துதான் பார்ப்பா ராகில்
உகாரமு மொன்று யோங் யுள்ளுள்ளே தோற்றுந் தானே. 30

* இப்பாடலைச் சேர்ந்ததாய் ஏட்டு பிரதியில் இல்முன் நிசாவென்று சில பாடலிருந்தன. அவைகள் தாறுமாறு யிருப்பதைப் பற்றியும், இவ்விடத்தி லஃதவசியமில்லை யென்பதைப் பற்றியும் தள்ளிவிடப்பட்டன.

பழுத்தெழும் சிபாத்துத் தன்னைப் படுபொறி யதனிலேற்றி
யழுக்கினை யறுத்துப் பார்க்கில் அலிபதா யிருக்கு மப்போ
தெழுத்துகள் மூன்று யைந்தா யெட்டதாய் மூன்று மூன்றாய்ப்
பழுத்திந்தக் காய வீட்டிற் பருஞ்சுட ரெறிக்கக் காண்பார். 31

இந்தநல் வழியைத் தேர்ந்தோ ரென்றுமே யுலுவை நோன்பைச்
சொந்தமாய்க் கொண்டு மேலாந் தொழுகையிற் றரிபாடாகி
யந்தமா யிருந்து நாளை யாதியின் றிருமுன் னாகிப்
பந்தமார் சுடரைப்போலப் பண்பொடு நிற்பா ரன்றே. 32

அலிபெனு மெழுத்தை யோதி யமையுரு வாக்க மாட்டார்
அலிபென வோதுவார்க ளரவதொன் றினையுங் காணார்
புலியென மவுத்து வந்து பொடிபடப் பிடிக்கும் போதி
லலைபட மவுத்துண் டாக்கி யைந்துமே பறந்து போகும். 33

ஆதலால் முஸ்லி மானோ ரனுதினந் திக்கிர் பிக்கிர்
மீதினி லிருக்க வேண்டு மேதினி தனிலே யென்ன
வோதினாள் குறமாதிந்த வொண்டரு கல்வி யெல்லா
மாதவச் சபையோர் கேட்டு மகிழ்ந்தினி திருக்கும் போதில். 34

சங்கையா ரிறஸூலுல்லா தம்மையன் பாக வந்த
மங்கைதா னுலக மெல்லாம் வகுத்திட முன்ன னாதி
பொங்கொளி யாலுண்டாக்கும் புண்ணியப் பொருளே யென்று
மங்கள மாகப் போற்றித் தன்வர வுரைக்க லுற்றாள். 35

குறமாது தன்வரலா றுரைத்தல்.

கண்ணிகள்-இராகம்-முகாரி-ஆதிதாளம்.

ஈஸாநபி யவர்கட் கீமான் கொண்டேன் தகப்ப
னாசாரமாக வவர்கள் சொல்லு மேவலெல்லாம். 1

தினமுங் குறையறவே செய்துவரு நாளையிலோர்
தினமவர்கள் வேதஞ் செப்புஞ் சபைதனிலே. 2

சந்தோஷ மாக ஜனங்கள் முகம் பார்த்துப்
பிந்தி நடப்பதெல்லாம் பேசிவரும் போதினிலே. 3

ஒப்புவமை யில்லா வுடையோன் றிருத்தூதா
யிப்புவியில் வந்த இறஸூல் முஹம்மதுவே. 4

உங்கள்திரு நாமங்களு முங்கள் வரலாறும்
உங்கள்பெரு காரணமு முங்கள் குலப்பெயரும். 5

உங்களுயர் தீனு முங்கள் வழி வந்தோர்கள்
தங்கள் சிறப்புந் தகுதிகளு மற்றவெல்லாம். 6

எல்லவர்க்குஞ் சொல்லியுங் களெழில்தீன் விருப்பமுற்றோர்
அல்லலறு முங்க ளருமையுள வாரிஸ்தாய். 7

கத்த னிடத்தெவுமல் கியாமத்தி லேயதிக
முத்தி பெருவரென்று மொழிந்தார் மிகமிகவே. 8

இவ்வித மசிகவர்களியம்பினதை யென்றகப்பன்
செவ்வியுறக் கேட்டிருந்து செப்பரிய அதிவல்லோன். 9

பின்ன ரியற்றும் பெருங்கருமக் காரணமங்
குன்னிய தன்மை யொன்றுமறி யாமலெந்தை. 10

உங்கள் மேலாசை பொறுக்கமுடி யாதவராய்
எங்கள் திரு ஈஸா நபியின் முகநோக்கி. 11

முந்தவுறும் வள்ளல் முஹம்மதரிப் பாரினிலே
யிந்தவுறுங் காலமிந்தப் பேதை யறிந்திடவே. 12

சொல்லிடுக வென்னத் துதியோடு கேட்டதற்கங்
கல்லலொன் றில்லா வாண்டறுநா றுகுமென்றார். 13

அப்போதி லென்றகப்ப னாரணரீ ஸாநபியோ
டிப்பாரி லேபுதுமை யெண்ணரிதாய்ச் செய்தீர்கள். 14

அந்தமுறை யடிமைக் கன்பாய் முஹம்மதர்தான்
வந்துதிக்கு மட்டுலகில் வாழ லிருக்கும்படி. 15

சிந்தை மகிழ்ந்துதுஆச் செய்திடுகில் நானெழை
கந்த மணம்வீசும் ஹபீபிறஸூல் பாதங்கண்டு. 16

அவர்கள் கலிமாமொழிந்தே யாரணத்தி லாகிமிகும்
பவமறுத்துச் சொர்க்கப் பதியடைவே னென்றிரந்தார். 17

அவ்வுரைகேட் டேமசிகென் னையர் முகநோக்கி
இவ்வுலகி லம்மட்டுநீ ரிருக்கவிதி யின்றெனினும். 18

இயம்புகின்ற ஆயுளுமக் கென்பதின்மே லோர்புதல்வி
சுயம்பிறைவன் றன்னருளாற் சொல்லுமுழுச் சந்திரன்போல். 19

பந்துஜனர் மெய்ச்சப் பரிவிற் பெருவீரவள்
அந்தம்பெறு யென்றும்பதி னறுவய தாயிருந்தே. 20

மிகுந்தகல்வி யெல்லாம் விளங்கிப்பல பாடுபட்டுத்
தகுந்தவற்பு தத்தோடுந் தாயகர் முஹம்மதரை. 21

மலர்மாலை சூட்டி வாழ்ந்திருந்து சொர்க்கபதி
நலமாகச் சேர்வளென்று நவின்றார்க ளப்படியே. 22

அல்லா கிருபையினு லம்புவியில் நான் பிறந்தே
நல்லா வளருகின்ற நாளையிலே யென்றகப்பன். 23

ஜெகத்தில் வாழ் நாட்கள் தீர்ந்ததினு லேயிறந்து
மிகுந்தபுகழ் வானுலகை மேவினு ரப்போது. 24

எங்கள் குலத்தினர்க ளெல்லவருங் கூடியொன்றாய்
மங்கை யிவள் குமராய் வைக்கமுடி யாதெனவே. 25

என்னையொரு மாப்பிள்ளைக் கியல்பாகத் தாலிகட்டி
யுன்னிதமாய் வைத்தா ரென் னூழ்விதி தெரியாதே. 26

அந்தப் புருஷனென்னை யன்பாய் நெருங்கவரில்
முந்தமுத லோன்விதித்த முறைபிசகா மற்றானே. 27

எங்க ளிருபேர் கிடையிலொரு பச்சைமலை
பொங்கி யெழுந்து பொருந்தாமற் செய்ததுவே 28

இன்ன படியாக விருக்குந் தினத்தொருநாள்
முன்னுதித்துப் பின்னுதித்த முஹம்மது றஸூல் நபியே. 29

ஹக்கனரு ளாற்கனவிற் காரணரே நீங்கள்வரச்
சக்கறவே கண்டெனது சரீரம் நடுநடுங்கி. 30

உடனே கலிமா வுரைத்து விடிந்தெழுந்து
தடையறவே யெங்கள் ஜாதியோர் பார்க்குமுறை. 31

மண்கூட்டிக் காரணங்கள் வழுவாமற் பார்த்ததிலே
பண்கூட்டும் வேதப் பயஹாம்ப ரைச்சேர்ந்து. 32

வாழுவதில் யாதும் வழுவுறா தேயெனவே
சூழுகின்ற சந்தோஷத்துடனே மன்னவர்க்கு. 33

நல்லுறுதி பல்பலவு நவின்றிருநீர் வாரேனென்று
சொல்லிவிட்டு வந்தேனுன் சோதிநபி யேயதனல். 34

சிக்கிரத்திலே மலையிற் சென்றவரைக் கூட்டிவந்து
பாக்கியமார் நுங்கலிமாப் பகரச் செய்யத் தான் வேண்டும். 35

வானவர்கள் போற்று முஹம்மது றஸூல் நபியே
கானினுடும் போடுமொழி ஹபீபேயென் கண்மணியே. 36

தீனவர்கொண் டாடும் ஜெயசோ பனநபியே
தானஞ்செய்ய நீண்ட சங்கையுள கையினரே. 37

தேவரீர் தங்கள் திருப்பாத மாசைகொண்டு
ஆவலோ டிரவுபக லதுவே நினைப்பாக. 38

வெகுகாலங் காத்திருந்து வேகன் விதிப்படியே
தகுமான வுங்கள் சமுக மடுத்ததினல். 39

ஏழையடியா ளெண்ணம் நிறைவேற வின்பஞ்
சூழமண மாலே சூட்டிடுங்க ளென்றுரைத்தாள். 40

மாதுறைத்த தெல்லா முஹம்மது றஸூல்கேட்டோ
ராதியைப் புகழ்ந்தே யரிய மகிழ்ச்சியோடும். 41

சிங்கார மானகுறத் தேன்மொழியைத் தான்பார்த்து
நங்கா யிப்போது நான்மனைக்குப் போய்வாரேன். 42

நீரெழுந்து மேன்மை நிலைத்திருக்கு மென்மகளார்
பாரெழுந்து கீர்த்திவளர் பாத்திமா தன்மனைபோய். 43

இருமெனவே சொல்லிங்ங னெழில்பிலா லைக்கூவித்
திருமகளார் பாத்திமத்தின் சிறப்பார் மனைமீதில். 44

காய்தலில் லாதகுறக் கன்னியரைக் கூட்டிக் கொண்டு
போய்விடுத்துச் சங்கையாய்ப் புசிப்பளிக்கச் சொல்லுமென்றார். 45

அப்படியே பிலால்முஅத்தீ னஹ்மதுற ஸூலுரைபோல்
தப்பகல வந்த வந்தத் தையல் குறமாதை 46

பொற்பா யழைத்துக் கொண்டு போய்ப்பாத்தி மாவுடைய
கற்பகர்நேர் வீடுசென்று கனிமொழியார் தம்மைக்கண்டு. 47

நங்கயினர் சொன்னபடி நவின்றுகுற மாமகளை
நன்னயமாய் விட்டுவிட்டு நடந்தா ரவர்மனைக்கே. 48

அப்போது தான் பாத்தி மாஞச்சி யாருமிகு
குப்பாக மனமகிழ்ந்து குறமகட் கருமைசெய்து. 49

பால்பழமுந் தேனும் பசுவினெய்யு மேவார்த்து
மேல்மேல் ருசிக்கும் பிரியாணி யாக்கிநல்ல. 50

சங்கையோ டுணக்கொடுத்துத் தாம்பூல மற்றதுவு
மிங்கிதம தாகவெடுத்துக் கொடுத்தனர்கள். 51

பாத்திமா நாச்சியரும் பண்பாய்க் கொடுத்துவந்த
நேத்தியார் தாம்பூலமங் நேரிழையுந் தானருந்து. 52

சந்தோஷமாகத் தரித்திருக்கும் வேளையிலே
அந்திமதி போன்றநாச்சி யாரு மடுத்திருந்து. 53

விந்தைக் குறமகளை மேன்மையொடுந் தான் பார்த்தே
அந்தமுழுந் தாமரைப்பூ வதனைவெல்லும் வாய்திறந்து. 54

உங்களூ ரெங்கே யுள்ளதனை யோது மென்றார்
மங்காத மேன்மை மாதுகுற மப்போது. 55

மானபி மான முள்ள முஹம்மது றஸூல்மகளைத்
தானோக்கி யூரினெல்லை சாற்றத் தொடங்கினளே. 56

பூஞ்சோலை மீதிற் புருக்கள் மயிலிருந்து
தேன்சா றருந்தித் தெவிட்டியா னந்தமுற்றே. 57

உள்ள மகிழ்ந்தே யுவந்துவிளை யாடுதலும்
கிள்ளைக ளிருந்தே கெம்பீரம் பேசுதலும். 58

பச்சைப் புருக்கள் பழமருந்தி மெய்யிறைமே
லிச்சைவைத்து வேதமொழி யிசைத்திசைகள் பாடுதலும். 59

வாழை கரும்பு மாகமுகு மாதுவளை
காழகில் சந்தம்பிலாக் கனியெலு மிச்சைவிளா. 60

நெல்லிகொழு விஞ்சி நிகத்திடுநா ரஞ்சியின்னும்
நல்லகனி வர்க்கமரம் நான்கிடமுஞ் சூழுதலும். 61

மல்லிகைப்பூ முல்லை மருக்கொழுந்து சண்பகப்பூ
சொல்லரிய நால்வகைபூஞ் சோலை விளங்குதலும். 62

வன்விளங்கு மேகமென்றும் வரிஷிப்ப தோடுமிகு
கான்சுனையு னீருங் கனக்கச் சொரியுதலும். 63

மான்மரைக ணன்மிருக மாறு துலாவுதலும்
தான்பொருந்தி மேலான சங்கை வளங்கள்செறி. 64

அறபாத் தெனவுரைக்கு மம்மலைக்கு மப்பாலே
திறமான வோர்மலைமேற் சிறியா ளிருப்பதென்றாள். 65

இவ்விதமாய் நவ்வியுறு மெழில்நாச்சி யாருடனே
செவ்விய குறமாது செப்பி யிருக்கையிலே. 66

பள்ளிவிட் டெழுந்தரிய பயஹாம்பர் நம்பிறஸூல்
விள்ளுமாயி ஷாமனையில் மேவிப் புசித்திருந்தார். 67

அப்போ தனுதி யவனருளா லேயெழுந்து
முப்பார் புகழு முஹம்மதுற ஸூல்நபினர். 68

ஆதி யகத்தி லழகாக வந்திருந்து
மோதின் பிலாலை முடுக வரவழைத்து. 69

கன்னிகுற மாதினைத்தான் காவி னெழுதுதற்கே
அன்னாள் பொருத்தங்கேட்டிங் காகுமென வேயுரைத்தார். 70

உடனே பிலாலுமந்த வொண்டொடியாள் பாற்போந்து
திடனுன வுத்திரவு சீக்கிரத்திற் பெற்று வந்தார். 71

குறைஷித் தலைவர்களுங் கூறரிய யார்களுமே
நிறைவா யிருக்குமந்த நீள்சபையில் நங்கயினுர் 72

குறமாது சங்கதியைக் கூறி மகிழ்ச்சிசெய்தே
யறமீ துதித்தவள்ள லஹுமதர் மணமுடித்தார். 73

அந்தச் சிறப்பதனை யெல்லவருங் கொண்டாட
வந்து நயினுர் மனைபுகுந்தம் மாதுடனே. 74

கூடியின்பங் கொண்டார் குதாயருளால் வானோர்கள்
நீடுமா னந்தக்கடல் நீந்தியாடிப் பாடினரே. 75

இவ்விதச் சிறப்போ டிருக்குங்குற மாதிடத்தில்
நவ்வியிற ஷஇல்மகளார் நாச்சியார் தாமடுத்து. 76

மிஞ்சு மறிவுடைய மேன்மையுள்ள தாயேநீர்
கொஞ்ச மறிவெனக்குக் கூறுமெனக் கேட்டார். 77

அப்போ குறமகளு மம்பாத்தி மாவோடும்
துப்புரவா ரென்மகளே சுறுதிபுறுக் கானதனை. 78

விசுவதித்து நல்லமலில் மேவுபெண்கள் யாவரையும்
வசைகளற ஆகிறத்தில் வல்லோன் முகதாவில். 79

உங்களுடைய தந்தை யுத்தரவால் மன்றூடித்
திங்களொளிச் சொர்க்கபதி சேர்ப்பீர்க ளாதலினுல். 80

நானுமக்கிங் கெவ்விதத்தில் நவில்வே னறிவுகளைத்
தேனிருக்கு நும்வாயிற் சிறந்த அறிவுகளை. 81

நான்கேட் டனுதினமு நயம்பெறுதற் கேவிருப்பீந்
தான்கொண்டேன் சொல்லுமெனத் தயவாகக் கேட்டனளே. 82

இவ்விதங் குறமாது மெழில்நாச்சி யாரிடத்திற்
செவ்வையுறக் கேட்டதற்குச் சிறந்தகாதுான் பீவியுமே. 83

மனதுமகிழ்ந் தந்த மாதுகுறக் கைப்பார்த்தே
யெனது மனத்திலொரு சந்தேக முள்ளதனை 84

ஓதுகிறேன் தாயே நீ ரொளிக்காமலி ன்னதென
வேதமறச் சொல்லுகென வியம்பத் தொடங்கினரே. 85

வல்லமையில் வல்லமையும் வல்லவனுக் கேலாததும்
சொல்லிடுவீ ரெனச் சுந்தரமாய்க் கேட்டார்கள். 86

அதுகேட்டங் கேகுறமா தறைய முடியாமல்
மெதுவாக நோட்டமிடும் வேளைநபி நாயகரும். 87

அங்குவந்த போதுமஸ லாவை யுரைத்தனர்கள்
சிங்கார மானநபி செப்பினா ரென்னெனிலோ. 88

வல்லமையில் வல்லமைதான் வறுமையிளம் போதில்வந்தால்
நல்லசபூ ரேடுமனம் நழுவா திருக்குதலை. 89

ஆதியவனா லடுமைப்படவேலா தென்றார்
ஓதுமிச் சவாபினைக்கேட் டுண்மைக் குறமகளும். 90

வள்ளலிற ஸலலை வாழ்த்தி மிகப்போற்றி
விள்ளா மெனதுமனை மீதினிற்போய் நான்வரவே. 91

உத்தரவு தாருங்களென் றுவப்பாகப் பெற்றுக்கொண்டு
பத்திரமாய்த் துணைகளோடு பாரமலை மீதிற்சென்று. 92

தன்குறவ னுக்குநபி சபையில் நடந்ததெல்லாம்
துன்பறவே சொல்லிநபி தூய மலப்பதத்தில். 93

இன்பமுடனீரும்வந்தே யிறைஞ்சியிஸ் லாமாகி
அன்பாகப் பின்னா ளவ்வுலகி லேதானே. 94

முத்திபெற வம்மெனவே மூன்றுநா ளங்கிருந்து
குத்திரமில் லாதவந்தக் குறவனையுங் கூட்டிவந்து. 95

காதல் நபிபதத்தைக் கண்டு ஸலா முரைத்துப்
பாதங்க ளைப் போக்கிப் பலநலங்க ளைக்கொடுக்கும். 96

தீனிலையி லேகுறவன் சேர்ந்தும கிழ்ந்திருக்கத்
தானியற்றி யேகுறபெண் சங்கை நபியினோடும். 97

பூவுமணமும் பொருந்தியுற லைப்போலும்
கோவு மொளிங் கூர்மையுற லைப்போலும். 98

நகமுஞ் சதையு நண்ணியக லைப்போலும்
சுகவாரி மூழ்கிச் சுகித்திருந்து வாழ்ந்தார்கள். 99

ஆதியருள் வாழி யஹ்மதுற ஸூல்வாழி
மாதவமார் கின்றநபி மாபெவருந் தாம்வாழி 100

மன்னும் அஷறத்துமுல் பஷிரீன்க ளும்வாழி
அஹ்மதுற ஸூல்நயினா ராலவுலா துகள்வாழி. 101

மகிமை யஸ்ஹாபி மார்கள் பலரும்வாழி
அன்பா ரஸனுஸைனு மவர்கிளையு மேவாழி. 102

தென்பார் முஹியித் தீனவர்க ளும்வாழி
உண்மையா லீம்க ளுலமாக்களும் வாழி. 103

மாதுகுற மிதனை வாகாய்ப் படிப்போரும்
நீதியோடு கேட்போரு நீடூழி தான்வாழி 104

நன்றியொடுமிதனை நாடித்தலிற் செய்வோரும்
என்றும் பொருள் விளங்க இசைப்போர்களும் வாழி. 105

நன்னெறியின் மன்னவர்கள் நாடோறு மேவாழி
பொன்விளங்க ஈயும் புண்ணியர்களும் வாழி 106

சொன்யத்தின் யாவர்களும் சுகமாக வேயிருந்து
நின்னயத்தி னேடும் நீடூழிதான் வாழி. 107

குறமாது-முற்றிற்று

அல்லாஹு தஆலாவுடைய கிருபை உதவியினாலும், முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களனுக்கிரகத்தினாலும், குதுபுமுஹியித்தீனப்துல் காதிர் ஸாஹிபாண்டகையவர்கள் துஆப் பேருகிய கடாக்ஷத்தினாலும், இக்குறமாதென்னும் பாடலை மிகவும் பார்வையிட்டு முன்னரெழுத்துச் சொற்பொருட் சரித்திரத் தப்பிதங்களைக்கண்டு சேர்க்கவேண்டியவைச் சேர்த்தும், நீக்க வேண்டியவையை நீக்கியும், பாடவேண்டியவையைப் பாடியும் ஒருவாறு சுத்தப் பிரதியாக்கி அச்சிடப்பட்டது.

காதிரி கண்ணஹூமது மகுதூ முஹம்மது புலவர்

இங்ஙனம்

ஹாஜி. எம். எ. ஷாஹூல் ஹமீது அண்டு ஸன்ஸ்
ஹமீதிய்யா பில்டிங்ஸ், நெ 20, ஹைறோட்,
திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

TAMIL NADU ARCHIVES LIBRARY
111392

Printed at Shahul Hameedia Press, Madras.

முனாஜாத்து மாலிகை.

பன்னிரண்டு முனாஜாத்துகள் சேர்ந்திருக்கின்றன.

1-வது அல்லாஹு தஆலாவுடைய அஸ்மாவுல் ஹுஸ்னு வென்னும் தொண்ணூற்றொன்பது திருநாமங்களைக் கொண்டு கேட்கப்படும் முனாஜாத்தும், 2-வது ஹக்குதஆலாவின் பேரில் அலிபுபே இருப்பத்தொன்பது ஹர்புகளை ஆரம்பமாக வைத்து பாடப்பட்ட முனாஜாத்தும், 3-வது றஸூலுல்லா பேரில் முனாஜாத்தும், 4-வது அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் பேரில் முனாஜாத்தும், 5-வது பாத்திமா நாயகி அவர்களின் பேரில் முனாஜாத்தும், 6-வது இமாம் ஹஸன் ஹுஸைன் (றலி) அவர்களின் பேரில் முனாஜாத்தும், 7, 8-வது முஹியித்தீன் ஆண்டவர்கள் பேரில் முனாஜாத்தும், 9, 10-வது ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் பேரில் முனாஜாத்தும், 11-வது கல்வத்து நாயகம் ஒலியுல்லா அவர்கள் பேரில் முனாஜாத்தும், 12-வது கிழக்கரை ஷெய்கு ஷாஹுல் ஹமீது ஆலிம் அவர்கள் பேரில் முனாஜாத்தும் ஆக பன்னிரண்டு முனாஜாத்துகள் அடங்கிய அரிய நூல். இதன் விலை அணா. 5

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 12

மஜ்மூஅ முனாஜாத்.

சுத்தத் தமிழ்

(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத்து, யாஸையிதி மாலை, யாகுத்பா மாலை, தலைப் பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜா பந்தே நவாஸ் முனாஜாத், ஸரசுவதி மாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன. இதன் விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 1—4—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

2B
2-19

சைதத்துப் படைப்போர் வசன காவியம்

இது ஹஜ்ரத் அமீறுல் முஃமினீன் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர் அப்துல் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீர் சுபியான் என்னும் ஒரு அரசனோடு வெகு சாமர்த்தியத்துடன் யுத்தஞ் செய்து அவனுடைய மகளாகிய செய்தத்துவை கலியாணஞ் செய்து மதினத்திற்கு வந்தது முதலிய விஷயங்கள் நிறம்பியுள்ள ஒரு அற்புதமான கிரந்தமாகும். இதை வாசிக்கவும் கேட்கவும் வெகு இன்பகரமா யிருக்கும். இதைப்பற்றி நிறம்பச் சொல்லவேண்டியதில்லை. இதானது மலையாளம் குஞ்சு மூஸா புலவர் அவர்களால் செய்துள்ள செய்யிதத்துப் படைப்போர் என்னும் காவியத்தையே வசன ரூபமாகச் செய்யப்பட்டது.

வசனம் விலை அணா. 12 ஷை பாடல் விலை அணா. 12

பஞ்சரத்தின தாலாட்டு.

இது 1-வது ஞானத் தாலாட்டு, 2-வது பாத்திமா நாயகத்தின் பேரில் சுகானந்தத் தாலட்டு, 3-வது முஹியித்தீன் ஆண்டவர்கள் பேரில் மணிமந்திர தாலாட்டு, 4-வது ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் பேரில் மீரான் தாலாட்டு, 5-வது பாலர்களுக்கு வாழ்த்தக்கூடிய பாலர் தாலாட்டு ஆகிய ஐந்து தாலாட்டுகள் சேர்த்து நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா. 3

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 10

பன்னிரண்டு மாலை.

இது கீழக்கரையி லடங்கி மறைந்திரா நின்ற மெஞ்ஞான சொரூபராகிய காமிலொலி ஷெய்க் அப்துல் காதிர் லெப்பை ஆலிம் ஸாஹிபு அவர்களால் பாடியது. இதில் தரீகத்து மாலை, ஹகீகத்து மாலை, மஃரிபத்து மாலை, தவ்ஹீது மாலை, சிர்று மாலை, திக்று மாலை, பிக்ரு மாலை, உஜூது மாலை, ஷுஹூது மாலை, அதபு மாலை, அறிவு மாலை, பயானுத்தீன் மாலை ஆக பன்னிரண்டு மாலைகள் சேர்ந்திருக்கின்றன.

சுத்தத் தமிழ் பதிப்பு விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 14

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.